# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 13

1 - 7 - '57


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| கடற் புலி | .. | 3 |
| துப்பறியும் மோகன் | .. | 5 |
| காதொலிக் கருவி | .. | 11 |
| நல்ல நண்பன் | .. | 13 |
| அண்ணு நீ? | .. | 17 |
| அந்தக் கால்கள் | .. | 22 |
| ஆண்டிகள் மகாநாடு | ... | 27 |
| மாமாவந்தார்! | .. | 29 |
| வெள்ளை முயல் | .. | 33 |
| பேனு நண்பன் | .. | 34 |
| கவியரங்கம் | ... | 37 |
| நீங்களும் நானும் | .. | 38 |


அட்டைப் படம்,

போட்டோ: N.ராமகிருஷ்ணு

பேனு நண்பர்கள் -

2-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ: 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## பித்தம் தெளிய...



# குழந்தைகளே!

சென்ற இதழில் முற்றுப்பெற்ற 'அந்தச் சிலை' பரிசுத் தொடர் கதையைப் பாராட்டி பல நேயர்கள் அவ்வப்போது எழுதினார்கள். இப்பொழுதும் பலர் தினமும் எழுதி வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் கண்ணன் சார்பாகவும் அதை எழுதிய 'சுறுமீன்' சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாதம் கல்விச் சாலைகள் எல்லாம் திறந்து விடுகிறார்கள். புதிய வகுப்புக்கு நீங்கள் புது மலர்ச்சியோடு செல்வீர்கள். ஓரிருவர் பரீட்சையில் தவறி, பழைய வகுப்புக்களிலேயும் உட்கார நேர்ந்திருக்கும். அப்படிப்பட்டவர்கள் சென்று போனதற்காக வருந்தாமல் புதிய உற்சாகத்தோடும் நம்பிக்கையோடும் பாடங்களைப் பயிலவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரீட்சையில் வெற்றி பெறாதவர்கள் வெறும் மக்குகள் என்று அர்த்தமில்லை. வெற்றி - தோல்வி எல்லாருக்குமே சகஜம். சிறு வயதிலேயே தோல்வி கண்டவர்கள் சரியான முறையில் உடனே தங்கள் குறைகளை மாற்றித் திருத்திக் கொள்ளவேண்டும். எதிர்காலம் மிகமிக விரிவானது. நம்பிக்கையோடு முன்னேறுகிறவர்களை அது என்றும் வரவேற்கக் காத்திருக்கிறது. எனவே அவர்கள் மனச்சோர்வு அடையாமல், தோல்வியைக் கண்டு அஞ்சாமல், படிப்பில் ஊக்கம் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேறாமல் போய் விட்டதற்காக வெட்கமோ தளர்ச்சியோ கொண்டுவிட்டால் இந்த வருஷமும் முன்னணிக்கு வரமுடியாது. எந்த அம்சத்தில் உங்களுக்குக் குறை யிருந்ததோ அதைத் தெரிந்து, அதைப் போக்கிக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம். ஒரு வருஷம் பரீட்சையில் தவறிவிட்டால் படிப்புக்கே லாயக்கில்லை என்று எண்ணிவிடக் கூடாது. அதுவும் ஒரு நன்மைக்கு என்று கருதி, கவனத்தோடும் தன்னம்பிக்கையோடும் படித்தால் வெற்றி உங்களைத் தேடிக்கொண்டு வரும் என்பது உறுதி. பரீட்சையில் தேறியவர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் பழைய நண்பர்களைப் பரீட்சையில் தேறாததற்காக அலட்சியமாகப் பார்க்காதீர்கள்; எண்ணாதீர்கள். அவர்கள் போதிய மார்க்குகள் வாங்காததற்கு எத்தனையோ காரணங்கள் இருந்திருக்கலாம். ஒருவருடைய அறிவை மார்க்குகளால் அளவிட்டுவிட முடியாது. உங்களைவிட அவர்கள் புத்தியில் குறைந்தவர்கள் என்று கருதாமல் அவர்களிடம் எப்போதும் போல் மதிப்புடனும் பரிவுடனும் நடந்துகொள்ளுங்கள். அப்படிச் செய்தால் அது அவர்களுக்கு நம்பிக்கையை வளர்ப்பதோடு உங்களுக்கும் பெருமை தரும்.

இந்த விடுமுறையில் நீங்கள் பரிசுப் போட்டிக்கான தொடர் கதையை எழுதியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இது பற்றிய நிபந்தனைகள் வழக்கம் போலத்தான். ஆகவே எழுதியவர்கள் இப்போதே அனுப்பலாம். புதிதாக எழுதுபவர்களும் ஆகஸ்டு மாத முடிவுக்குள் அனுப்பவேண்டும்.

சித்திரப்போட்டிக்குத் தினம் தினம் படங்கள் வந்துகொண் டிருக்கின்றன. அதன் முடிவுத் தேதி ஜுலை 31-ஆம் தேதி என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

'நீங்களும் நானும்' என்ற பகுதிக்கு மலேயாவிலுள்ள நேயர்கள் விமானத் தபால் மூலம் தங்கள் கேள்விகளை எழுதியனுப்பலாம். அவர்களிடமிருந்து தகுந்த கேள்விகள் வராததால் விடை தரப்படவில்லையே தவிர, அவர்களுக்குப் பதில் கூறுவது இல்லை என்று யாரும் எண்ண வேண்டாம். அந்தப் பகுதியினால் எல்லாருடனும் நேரிடப் பேசிப் பழகுகிற இன்பம் எனக்கு உண்டாகிறது. அதிலே ஏற்றத் தாழ்வு வேற்றுமை வித்தியாசம் ஒன்றும் கிடையாது. பத்திரிகையில் உள்ள இடத்துக்கும் கேள்விகளுக்கும் ஏற்பவே விடை எழுதப்படுகிறது. ஆகவே யாரும் இதைத் தவறாக எண்ணவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—ஆசிரியர்.


மரக்கலங்கள் நெருங்குமுன்னே திசைக்கு ஒன்றாகத் தத்தளிக்கும் அந்த வீரர்கள் மூலைக்கு ஒருவராகக் கையைத் தூக்கிச் சத்தமிடுகிறார்கள்.
உதவி!
ஆபத்து!
ஐயோ! ஆபத்து!
காப்பாற்றுங்கள்!
பல்லவ மரக்கலங்களில் உள்ளவர்கள் கடலில் தத்தளிக்கும் இவர்களைப் பார்த்துக் கொண்டு அம்பு எய்யத் தயாராக இருக்கிறார்கள். அப்போது....
நொந்தவர்களைத் தாக்காதீர்கள்! அதோ அவர்களே சமாதானக் கொடி ஏந்தி வருகிறார்கள். கொள்ளைக்காரர்களும் மனிதர்கள் தானே! ஆபத்து என்றால் உதவ வேண்டும்!
அரசனுடைய ஆணைக்குட்பட்டு மரக்கலப் போர் வீரர்கள் எதிரிகளைத் தாக்காமல் அவர்களை அருகே வர விடுகிறார்கள். கொள்ளைக்காரர்கள் மரக்கலங்களில் ஏறித் தொத்திக் கொள்கிறார்கள்.


பல்லவ வீரன் கொள்ளை வீரனைப் பார்த்து....
என்னப்பா விஷயம்?
மரக்கலம் பொத்துக் கொண்டு விட்டது!
கொள்ளைக் கப்பலின் கொடிமரத்தில் ஒருவன் கொம்பை ஊதுகிறன்.
பூம்! பூம்!
நம் கொடியைப் பறக்க விடுங்கள்! கப்பல் முன்னேறட்டும்! தாக்குங்கள் எதிரிகளை!
பல்லவர் கப்பலில் இருக்கும் கொள்ளை வீரர்களில் ஒருவன்.
அதோ கொடி! உம். ஆகட்டும்!

(தொடரும்)



# துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

## 7. நடுக்காட்டில்!

சிவசாமி, "தினகரத்தினத்தைச் சிகரெட் பொடியால் மயக்கியவன்தான் மிஸ்டர் சுந்தரத்தையும் கைக்குட்டையால் மயக்கியிருக்கிருன்" என்ருன். சாரங்கபாணி விஷயம் விளங்காமல், "கைக்குட்டையாலா? அது எப்படி?" என்று கேட்டார்.

"கைக்குட்டையில் ஒரு பகுதியில் மயக்க மருந்தைத் தடவி அதை இவர் மூக்கில் படும்படி விசிறியிருக்கிருன். உடனே இவர் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டார்."

"அது எப்படித் தெரியும்?"

சிவசாமி கையைத் தட்டி வெளியே காவல் புரிந்துகொண்டிருந்த ஒரு போலீஸ்காரனை அழைத்தான். "பொன்னு, வாசற்படிக்குப் பக்கத்திலே ஒரு கைக்குட்டை விழுந்திருக்கும். அதை நுகர்ந்து பார்க்காமல் எடுத்துக்கொண்டுவா. சாரங்கபாணியே நுகர்ந்து பார்த்து நான் சொன்னது சரிதானு என்று நிச்சயம் செய்துகொள்ளட்டும்" என்ருன். அந்த வீட்டுக்குள் நுழையும்போது அங்கே கைக்குட்டை கிடந்ததை அவனைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை.

கைக்குட்டை வந்ததும், சிவசாமி கூறியது சரிதான் என்று உறுதி ஆயிற்று. அந்தக் கைக்குட்டையில் ஏதாவது குறி இருந்தால் அதை வைத்துக்கொண்டு திருடனைப் பிடிக்கலாமே என்று மோகன் நினைத்துக் கைக்குட்டையைப் பிரித்துப் பார்த்தான். ஆனுல் கைக்குட்டையில் எவ்விதக் குறியையும் காணேம்.

மற்ற விஷயங்களையும் நன்ருகக் கேட்டறிந்துகொண்டு அனைவரும் சுந்தரத்தின் பங்களாவிலிருந்து திரும்பினர்.

* * *

'கருகும்' என்ற இருட்டு எங்கும் பரவியிருந்தது. எங்கும் அமைதி ஆட்சி செலுத்திக்கொண்டிருந்தது. மூடிய மேகத் திரைகளை விலக்கி இடையிடையே சந்திரன் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். தாரகைகள் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட இருளில் எவ்வித பயமோ தயக்கமோ இன்றி அதோ விரைவாக ஒரு பையன் நடந்து வந்துகொண்டிருக்கிருனே, அவன் யார்? அவன் எங்கிருந்து வருகிருன்?

அந்தப் பையனைச் சற்றுக் கூர்ந்து பார்த்தோமானுல் அவன் நமக்கு ஏற்கனவே அறிமுகமானவன்தான் என்பதை எளிதில் கண்டுகொள்வோம். ஆம்; அவன் வேறு யாருமல்ல. மோகன்தான். மோகன் இயற்கையிலேயே நெஞ்சுத் துணிவு நிறைந்தவன். இல்லா

விடில் அவன் தந்தை அடித்த போது அன்றிரவே அவன் பல மைல்கள் ஓடி ரெயிலேப் பிடித்துப் பட்டணம் வந்திருக்க முடியுமா? இயற்கையாகவே இருந்த இந்த நெஞ்சுத் துணிவு, ஸி. ஐ. டி. சிவ சாமியின் நட்பினுல் இன்னும் அதிகமாக வளர்ந்தது. ஒரு துப் பறிபவன் எப்படி இருக்கவேண்டும் என்பதை யெல்லாம் சிவசாமி, மோகனுக்கு விளக்கியிருக்கிருன். அவனேடு பழகிப் பழகி அவனுக்கு இருந்த நெஞ்சுத் துணிவு மோக னுக்கும் வந்தது.

மோகன் அன்றிரவு பக்கத்து ஊரில் நடந்துகொண் டிருந்த ஒரு பொருட்காட்சியைப் பார்க்கச் சென்றுன். அந்தப் பொருட் காட்சியைப்பற்றிப் பத்திரிகை களும், அதை நேரில் கண்டவர் களும் புகழ்ச்சியாகப் பேசிக் கொண்டது அவ்வளவும் உண்மை. அது ஒரு மிகப் பிரம்மாண்டமான பொருட்காட்சிதான். இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறைதான் அத்தகைய பொருட்காட்சி நடை பெறும் என்று அனைவரும் பேசிக் கொண்டனர்.

மோகனுக்குப் பொருட்காட்சி என்றுல் எப்படி இருக்கும் என்றே இதற்குமுன் தெரியாது. அவன் படித்த கிராமத்தில் இதெல்லாம் கிடையாது. ஆகவே, அனைவ ராலும் பாராட்டப்படும் அந்தப் பொருட்காட்சியைத் தானும் போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. சிவசாமியைக் கேட்டதும் அவன் உடனே அனுமதி தந்துவிட்டான்.

''இதோ பார், நீ அங்கே எல்லா வற்றையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருவதானுல், இரவு பதினெரு மணிக்குமேல் ஆகும். வரும் வழி கொஞ்சம் அடர்த்தி யான காடுதான். ஆனுல் அதற் கெல்லாம் நீ ஒன்றும் பயப்ப



டாதே.....நீ இன்று இரவு வரும் போது வழியிலே ஒரு பெரிய திருடனையே கண்டுபிடிக்கப் போகிறாயே, எனக்குத் தெரியும்!'' என்று சிவசாமி, மோகனை உற்சாகப்படுத்திப் பேசினான்.

பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டு அந்தக் காட்டுப் பாதை வழியே திரும்பி வந்து கொண்டிருக்கும்போது மோகனின் மனத்தில் சிவசாமியின் இந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஒலித்தன.

சிவசாமி கூறியதுபோல் அது ஓர் அடர்ந்த காடுதான். அதில் இருபுறமும் மரங்கள் ஓங்கி நின்றன. நடுவில் சற்றே அகலமான ஒரு பாதை ஓடிக்கொண்டிருந்தது. அதில் ஒரு கார் தாராளமாகப் போகமுடியும். பொருட்காட்சிக்குப் போக இன்




னொரு நேர் வழி உண்டு. ஆனால் குறுக்குப் பாதையில் போவதை விட அது சுமார் 10 மைல் தூரம் அதிகம். ஆகவேதான் மோகன் பொருட்காட்சியைப் பார்க்கப் போகும்போதும் வரும்போதும் இந்தப் பாதையையே உபயோகப் படுத்தினான். அவன் மனத்தில் கொஞ்சமேனும் பயம் இல்லை.

எங்கோ ஓர் ஆந்தை அலறிற்று. மோகன் தன் நடையைச் சற்றே மட்டுப் படுத்தினான். பின்னர் விறு விறுவென்று நடந்தான். சற்றுத் தூரத்தில் அப்போது அவன் கண்டது அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

அந்த நடுநிசியில் நடுக் காட்டுப் பாதையில் ஒரு கார் நின்றுகொண்டிருப்பது மோகனுக்குத் தெரிந்தது!

மோகன் இருந்த இடத்திலேயே நின்றபடி கண்களை மட்டும் கூர்மையாக்கிக்கொண்டு பார்த்தான். அது ஒரு பழைய கார். அதனுள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இந்த நிசி வேளையில் அங்கே கார் நிற்க வேண்டிய மர்மம் என்ன?

சிவசாமியின் வார்த்தைகள் மோகனின் நினைவுக்கு வந்தன: 'இன்று நீ ஒரு பெரிய திருடனைக் கண்டுபிடிக்கப் போகிறாய், எனக்குத் தெரியுமே!'

இந்த இடத்தில் இப்போது ஏதோ ஒரு முக்கிய சம்பவம் நடக்கப் போகிறது என்று மோகனின் உள்ளுணர்ச்சி கூறியது. அப்போது அந்தச் சம்பவம் உண்மையாகவே நடந்துவிட்டது.

''அட, சை! நீயும் ஒரு மனுஷனுங்காட்டியும்! ஏண்டா இப்படி உன் உடம்பு நடுங்கறது? 'டார்ச்'சைச் சரியா காட்டித் தொலையேன்.''

''இ..இ..இதோ..கா..கா..கா..ட்டறேன்!''

மோகனுக்கு வெகு சமீபத்தில் இந்தப் பேச்சுக் குரல் கேட்டது. ஒரு குரல் உரிமையாக அதட்ட, இன்னொரு குரல் நடுக்கத்துடன் பதில் கூறியது. மோகன் சப்தம் செய்யாமல் ஒரு மரத்தை ஒட்டி ஒளிந்துகொண்டு நின்று நிதானித்தான்.

அவனுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த இன்னொரு மரத்தினடியில் இரண்டு பேர் நின்றுகொண்டிருந்தனர். ஒருவன் கையில் ஒரு துணி மூட்டை இருந்தது. இன்

னொருவன் கையில் ஒரு 'டார்ச்' எரிந்துகொண் டிருந்தது.

''ஆ...இந்த இடந்தான்! இரு இரு, அப்படியே கொஞ்ச நேரம் நடுங்காமல் விளக்கைக் காட்டு. இந்தக் குழிக்குள்ளே மூட்டையை வைத்துவிடுகிறேன்!''

இப்படி உரிமையுடன் சொன்ன அந்த ஆளை உற்றுப் பார்த்தான் மோகன். அவனை இதற்குமுன் தான் எங்கேயோ பார்த்திருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. எங்கே, எங்கே? மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்த அவனுக்குச் 'சடா'ரென்று நினைவுக்கு வந்தது. அவனும் சிவசாமியும் ஹோட்டலுக்குப் போனபோது அவர்களுக்கு எதிரே உட்கார்ந்துகொண் டிருந்த குள்ளர்களில் ஒருவனல்லவா அவன்? அவனைக்கூட சிவசாமி 'காளிமுத்து' என்று அழைத்தது மோகனின் நினைவுக்கு வந்தது. அவனுடன்கூட இருக்கும் இன்னொருவன் யாரோ? காளிமுத்துவின் கூட்டாளியாகத் தான் இருப்பான்! ஆனால், பயந்தாங்கொள்ளிபோல் இருக்கிறது! மோகன் இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவர்கள் 'மளமள' வென்று தம் வேலையை முடித்து விட்டார்கள்.

''அ..அண்ணே! இந்த இ.. இடத்தையா பிடிச்சே நகைகளையும் பணத்தையும் வைக்க? எ.. எனக்குப் பயமா இ..இருக்கு, அ..அண்ணே!''

''அட, இதுக்கெல்லாம் நீ கவலைப்படாதே, சோமு. இந்த ஐயா ஒரு வேலை செய்தாருன்னு அது பிரமாதமான 'ஐடியா'வுடன் தான் செய்வாரு. தெரிஞ்சுதா? இந்த இடத்தைமட்டும் எந்தப் போலீஸ்காரனாவது கண்டு பிடிச்சுடுவானா? அவனுக்குத் தலையிலே கொம்பு முளைச்சிருக்கான்னு கேக்கறேன்!...அட, அந்த ஸி. ஐ. டி.க்காரன்தான் வரட்டுமே! அவன் அப்பனே வந்தாலும்கூட எங்கிட்ட ஒண்ணும் செய்யமுடியாது, தெரியுமா? ஒ ஹோன்னானாம்!''

''அட, நீ என்ன அண்ணே இப்படிக் கூச்சல் போடறே? எனக்குப் பயத்திலே உ...உயிரே போயிடும்போல இருக்கு...நீ பாட்டுக்கு என்னடான்னா....''

''நல்ல பயந்தாங்கொள்ளிடா நீ, சோமு. உன்னைப்போல இருப்பவனெல்லாம் இதற்கு லாயக்கே இல்லை....''

''எனக்கு என்னமோ அண்ணே அந்தச் சிவசாமி எப்படியும் நம்மை மாட்டி விடுவான்னு தோணுது!... எ...எமகாதகனாச்சே அவன்!''

''அட சீ, வாயை மூடு!..சரி, இதைக் கவனி...இந்தக் குழிக்குள்ளே மூட்டையை வச்சேனா? இன்னொரு நாள் வந்தா அடையாளம் தெரியவேணும்? அதற்காக இந்தா, இந்தக் கல்லை அடையாளமாக அந்தக் குழி மேலே வைக்கிறேன். நல்லாக் கவனிச்சுக்கோ!''

மோகன் கவனித்துக்கொண்டான். அந்த இடத்தை மனத்தில் நன்றாகப் பதிய வைத்துக்கொண்டான். காளிமுத்து கஷ்டப்பட்டு ஒரு பெரிய கல்லை அந்தக் குழியின் மேல் நிறுத்தினான்.

''அண்ணே, ஒரு விசயம். நாம நகையை எல்லாம் இங்கே ஏன் வைக்கணும்? நம்ம பங்களாவிலேயே வச்சிட்டா என்ன?''

''..இவன் யாருடா இவன்? நம்ம பங்களாவிலே வச்சாத்தான் இதைவிட ஆபத்து. அப்படியே போலீஸ்காரனுக்குச் சந்தேகம் வந்து, நம் வீட்டைச் சோதனை போட்டாலும், நாம் இப்போ நிர்ப்பயமா இருக்கலாம், பாரு. இங்கேதான், இதையெல்லாம் கவனித்துக் கொள்ள, ரத்னம் இருக்கிறானே?.. இன்னும் ஒரு இரண்டு நாளிலே இந்தத் திருட்டைப்பற்றின களேபரம் எல்லாம் அடங்கிவிடும். அப்போ நாம் திரும்பவும் இங்கே வந்து, இதை எடுத்துப் பிரித்துக் கொள்ளலாம்...''

''அப்படின்னா இப்போ பங்களாவுக்குப் போவோமா?'' என்று கேட்டான் சோமு.

''ஆகா, நீ போய்க் காரிலே உக்காரு. நான் ஓட்டமாய் ஓடிப் போய் ரத்தினத்திடம் இதைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி விட்டு வருகிறேன். பிறகு, இரண்டு பேரும் காரில் பங்களாவுக்குப்

போவோம். என்ன?'' என்றான் காளிமுத்து.

சோமு 'டார்ச்'சை அணைத்தான். இருவரும் பிரிந்து சென்றனர். மோகனும் மெள்ளத் தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான்.

மேலே என்ன செய்யலாம் என்று யோசித்தான். 'சிவசாமி இந்த இடத்தில் இருந்தால் என்ன செய்வான்? அவன் விஷயம் வேறே. அவன் நேரடியாகவே காளிமுத்துவிடம் போய், ''என்னையும் உங்களுடன் காரில் பங்களாவுக்கு அழைத்துப் போகிறீர்களா தயவு செய்து?'' என்றே கேட்டுவிடுவான்! அவனைக் கண்டால் அவர்களுக்கும் பயம். ஆனால் நான் இப்போது அம்மாதிரிச் செய்ய முடியுமா? என்னைமட்டும் பார்த்துவிட்டால் அவர்கள் கோபத்தில் என்ன வேண்டுமானாலும் செய்துவிடுவார்கள்.'

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைச் சொல்லி விடுவோமா என்று ஒரு கணம் யோசித்தான். ஒரு கணந்தான் இந்த யோசனை. பிறகு அதை உதறிவிட்டான். 'சிவசாமியிடம் போய்ச் சொல்வதைவிட இவர்களைப் பின்தொடர்ந்து சென்று இவர்கள் பங்களாவைக் கண்டுபிடிப்பது இன்னும் உபயோகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இவர்கள் காரிலேயே இவர்களுக்குத் தெரியாமல் ஏறி ஒரு மறைவிடத்தில் உட்கார்ந்துகொண்டு இவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்தால் என்ன?'

அது அருமையான யோசனை. அதை அடுத்த நிமிஷம் காரியத்திலும் காட்டிவிட்டான் மோகன். மெள்ளச் சென்று எவ்விதச் சத்தமும் செய்யாமல் காரின் பின்னால் சாமான்கள் வைக்கும் கதவைத் திறந்து உட்கார்ந்துகொண்டு அதை மூடிவிட்டான்.

சற்று நேரத்தில் காளிமுத்து திரும்பிவிட்டான். அவனும் காரில் ஏறிக்கொண்டான். அடுத்த கணம் கார் ஒரு குலுக்கலுடன் கிளம்பியது. இரண்டு திருட்டு முரடர்களையும், அவர்களைத் துப்பறியும் முயற்சியுடன் பின்பற்றும் ஒரு பாலகனையும் சுமந்துகொண்டு கார் பறந்தது.

கரடுமுரடான பாதையில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது கார் என்பதை ஒவ்வொரு விநாடியும் உணர்ந்தான் மோகன். அவன் அவ்வாறு உணரக் காரணமாக இருந்தது, அவன் அந்த இருட்டில் தலையில் வாங்கின அடிகள்தான். கார் ஒவ்வொரு மேடுபள்ளத்திலும் இறங்கி ஏறும்போது மோகனின் தலை காரில் மோதியது. அப்படி



இப்படி நகர்ந்து நன்ருகச் சுவாசிக்கக்கூட முடியாத பரிதாபகரமான நிலையில் இருந்தான் அவன். இந்தக் கஷ்டங்களையெல்லாம் பொறுமையோடு சகித்துக் கொண்டுவிட்டால், கடைசியில் நல்ல பலன் கிடைக்காமற்போகாது என்று எண்ணினன் அவன். சிவசாமியோ, திவான்பகதூர் வீட்டில் திருடியவனைக் கண்டு பிடிக்க வேண்டியது மோகனின் பொறுப்பு என்று சொல்லி, அந்தக் கேஸை அங்கேயே அவனிடம் ஒப்படைத்துவிட்டான்.

இவ்விதம் பலவாருகச் சிந்தித்தவண்ணமிருந்தான் மோகன். இந்தப் பிரயாணத்திற்கு முடிவே இருக்காதோ என்று அவன் நினைத்த சமயம் அவன் மண்டை 'படார்' என்று காரில் மோதிற்று, கார் அந்த இடத்தில் நின்று விட்டதற்கு அடையாளமாக.

மோகனின் மூளை மறுபடியும் சுறுசுறுப்படைந்தது. இந்த இரண்டு திருடர்களுக்கும் தெரியாமல் தான் மறைவாக இருந்து அவர்கள் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டியது அவசியம். அப்புறம் எப்படி நடக்கிறதோ, அப்படி நடக்கட்டும்! தன்னல் முடிந்தவரை முயன்று பார்த்துவிட வேண்டும்.

மெள்ளக் கதவைத் திறந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தான் மோகன். அந்த இருளில் முதலில் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனல் பத்து நிமிஷங்களில் அவன் கண்கள் கூர்ந்து பார்க்கும் சக்தியைப் பெற்றன. சுற்றிலும் யாரும் இல்லை என நிச்சயம் செய்து கொண்டதும் மெள்ளக் கீழே இறங்கினன் மோகன்.

அந்தக் கார் ஓர் இடிந்த பழைய பங்களாவுக்கு முன்னல் நின்று கொண்டிருந்தது. அது வெளிப் பார்வைக்கு ஒரு பங்களாவைப் போல் அழகாகத்தான் இருந்தது. மோகன் சந்தடி செய்யாமல் விரைவாக ஓடி அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தான். வாசலிலேயே மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள் இருந்தன. 'வருவது வரட்டும்' என்று எண்ணி அந்தப் படிக்கட்டுகளில் காலை வைத்து விரைவாக மாடிக்குச் சென்ருன். அவன் பாதி தூரம் ஏறியிருக்கும்போது கீழே காளிமுத்து, ''சோமு, கார் பாதையிலேயே இருக்கிறது. அதை 'ஷெட்'டுக்குள்ளே விடு'' என்று உத்தரவிடும் சத்தமும் அதை அடுத்துக் காளிமுத்து மாடிப்படியில் ஏறி வரும் ஒலியும் கேட்டன.

யோசிக்க நேரம் இல்லை. மோகன் கடைசிப் படியை அடைந்ததும் ஒரு நீண்ட அறை அருகில் தென்பட்டது. நிலா வெளிச்சம் திறந்திருந்த ஜன்னல் வழியாக அந்த அறையினுள் விழுந்தது. அந்த அறையின் மறு கோடியில் ஒரு பழைய கட்டில் இருந்தது. அதைத் தவிர அங்கே வேறொன்றும் இல்லை. அறையில் குப்பையும் கூளமும் எங்கும் சிதறியிருந்தது.

மோகன் அந்த அறையினுள் ஓடிச் 'சடா'ரென்று அந்தக் கட்டிலின் அடியில் நுழைந்து படுத்துக் கொண்டான். அதற்கு அடியிலும் ஒரே தூசும் தும்புமாக இருந்தன. கட்டிலின் கால்களில் ஒட்டடை தொங்கிக்கொண்டிருந்தது. கட்டிலின் அடியிலிருந்து அறைவாயிலை நோக்கிய மோகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

காளிமுத்து அந்த அறையினுள் நுழைந்து ஒரு சிறு விளக்கை ஏற்றினன். அதைக் கையில் எடுத்துக் கொண்டு அந்தக் கட்டிலை நோக்கி வந்தான்.


மோகனின் மனம் 'திக்' கென்றது. தான் அந்த அறைக்குள் நுழைந்தது, கட்டிலின் அடியில் படுத்துக்கொண்டிருப்பது எல்லாம் அவனுக்குத் தெரியுமோ என்று ஒரு கணம் சந்தேகப்பட்டான். ஆனல் அந்தச் சந்தேகம் வீண் என்பதை உடனே அறிந்துகொண்டான். ஏனெனில் காளித்து விளக்கைப் பக்கத்தில் வைத்துவிட்டு அந்தக் கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டான். நல்லவேளையாக வெளிச்சம் மோகன்மீது விழவில்லை.


சில நிமிஷங்களில் சோமுவும் அங்கே வந்து பக்கத்தில் உட்கார்ந்தான்.


(தொடரும்)

# காதொலிக் கருவி

ஈ. ஜி. என்.







இந்தக் கருவியைச் செய்யச் சிறிது நுணுக்கமும் பொறுமையும் தேவை. இதற்குத் தேவையான பொருள்களைக் கவனிப் போம்.

*(1)* நிலைக் காந்தம் (Coin testing magnet). இந்த வகைக் காந்தங்கள் இப்பொழுது சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கின்றன. இவைகள் அளவில் சிறியவையாகவும் பலமுள்ளதாகவும் இருக்கின்றன. இவற்றில் அதிகக் குறுகலாக இல்லாததாகவும் கூடியவரை இரண்டு பக்கங்களும் இடைவெளியில் சமமுள்ளதும் (Parallel) ஆக உள்ளதைத் தேர்ந்தெடுப்பது நலம்.


(2) 40 S. W. G. வார்னிஷ் பூசப்பெற்ற கம்பி. இது ஒரே நீளமுள்ளதாகவும், வெட்டிச் சேர்க்கப்படாமலும் இருக்கவேண்டும். வார்னிஷ் பழுதடைந்ததாக இருந்தால் அதை உபயோகிக்கக்கூடாது. இந்தக் கம்பி கிடைக்காவிடில் அதைவிடக் குறைவான எண்கள் உள்ள கம்பிகளை உபயோகிக்கலாம். ஆனால் கம்பி மிகவும் தடிப்பானதாக இருக்கக்கூடாது.

(3) தகர டப்பி. இதன் உயரம் காந்தக் கட்டையின் உயரத்தைவிடக் குறைந்தது முக்கால் அங்குலம் அதிகமாக இருக்க வேண்டும்.


(4) முன் சொன்ன தகர டப்பியின் மேல் மூடக்கூடிய அளவில் ஒரு தகரத் தகடு.

(5) 2″×2″ அளவுடைய ஒரு பலகை.

வார்னிஷ் கம்பியைக் காந்தக் கட்டையின் முனையில் படம் 2, 3 முதலியவற்றில் காட்டியபடி சுற்ற வேண்டும். இதைச் சுற்றும் பொழுது படத்தில் அம்புக் குறியிட்டுக் காட்டப்பட் டிருக்கும் திசைகளில் சுற்றவேண்டியது அவசியம். இரண்டு முனைகளிலும், சுமார் கால் அங்குலம் சுற்றளவுக்குக் கம்பியைச் சுற்றி, முனைகளைச் சுத்தப்படுத்தி வைக்கவும்.





இப்பொழுது செய்திருக்கும் காந்தத்தின் மேல் தகரத் தகட்டை வைத்தால், அது காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும். இப்பொழுது ஒரு பாட்டரியின் இரண்டு முனைகளிலும் காந்தத்தின்மேல் சுற்றிய கம்பி முனைகளை வைத்துத் தேய்த்தால் காந்தத்தின்மேல் வைக்கப்பட்டுள்ள தகரத்தில் கர கர என்ற சப்தம் தெளிவாகக் கேட்கும்.




பிறகு காந்தக் கட்டையை எடுத்துப் பலகையில் பதியவைக்க, படம் - 4 ஐக் கவனி.

இதைச் செய்து முடித்த பின்னர் தகர டப்பியின் அடிவில்லையை எடுத்துவிட்டு அந்தப் பக்கத்தில் ஓரத்திலிருந்து 7 அங் அளவுக்கு ஒரு வட்டம் போடவும். வட்டத்தின் எதிர்ப் புறங்களில் இரண்டு $\frac{1}{2}''$ அகலமுள்ள பாகங்களை விட்டுவிட்டு மீதி பாகத்தை வெட்டி எடுத்துவிடவும். இந்தப் பாகத்தை வெளிப்புறமாக மடக்கித் துளையிட்டு அதைப் பலகையின்மேல் படம் 6-இல் காட்டியபடி பதியவை. இதன் பின்னர் டப்பியின் மேல் புறத்தில் வட்டவடிவமான தகரத் தகட்டை வைத்தால், காந்தச் சக்தியால் அது கீழே விழாமல் ஒட்டி நிற்கும். இப்பொழுது கம்பியின் இரு முனைகளைப்பாட்டரி வழியாகப் பேசும் கருவிக்குச் சேர்த்து விட்டு, பேசும் கருவியில் சப்தம் உண்டாக்கினல் கேட்கும் கருவியில் தெளிவாகக் கேட்கும்.



6



# நல்ல நண்பன்

'நடவு'

அன்று வெகு குஷியாக இருந்தது தங்கம். பள்ளியில் குதித்துக் குதித்து நடந்தது. தாவித் தாவி ஓடியது. சந்தோஷத்தால் பல்லைப் பல்லைக் காட்டி 'மியாவ் மியாவ்' என்று சிரித்தது. பள்ளியிலேயே எல்லாப் பாடங்களிலும் தங்கம் முதல் மார்க் வாங்கியிருப்பதாக வாத்தியார் அறிவித்ததுதான் இதற்குக் காரணம். மற்ற மாணவிகள் எல்லாம் அதைச் சூழ்ந்துகொண்டு 'கலாட்டா' செய்தன.

தங்கம் பெரிய பணக்கார வீட்டுக் குட்டி. தங்கம் என்ற பேருக்குத் தகுந்தாற்போல அதன் உடல் தங்க நிறமாக இருந்தது. மற்ற குட்டிகளுக்கெல்லாம் அதனிடம் அன்பும் ஆசையும் மதிப்பும் உண்டு. பரீட்சையில் முதலாவதாகத் தேறிய சந்தோஷத்தில், மற்றப் பூனைக்குட்டிகளுக்கு மத்தியில் ஒரு ராஜகுமாரி போல் தோன்றியது தங்கம். அதன் உடல் பளபளவென மின்னியது.

பெருமைக்குரிய அந்தத் தினத்தைப் பிரமாதமாகக் கொண்டாட வேண்டுமென்று அதற்கு ஆசை. தன் வகுப்பு மாணவிகளை எல்லாம் அன்று மாலை தன் வீட்டிற்கு விருந்திற்கு வரும்படி அழைத்தது.

தங்கத்தின் வீட்டார் பணக்காரர்கள் ஆகையால் நிச்சயமாக எலிப் பட்சணம் கிடைக்குமென்பது அவைகளுக்குத் தெரியும். எல்லாக் குட்டிகளும் சந்தோஷத்தால் குதித்தன. நாக்கைச் சப்புக் கொட்டி மீசையை ஆட்டின.

பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்த தங்கம் வீட்டையே அமர்க்களப் படுத்தியது. அன்று மாலை விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை வெகு மும்முரமாகச் செய்திருந்தன அதன் பெற்றோர்.

இவைகளை எல்லாம் ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது புலியன். தன்னைக் கட்டியிருந்த சங்கிலியை இழுத்து இழுத்துப் பார்த்தது. விடுபடாமல் போகவே, 'வள் வள்' என்று சிறு குரலர்க் குரைத்தது. புலியன் அந்த வீட்டில் வளரும் நாய்க்குட்டி. தங்கமும் அதுவும் மிகவும் நேசமாகப் பழகின. தங்கத்தின் விருந்தில் தானும் கலந்துகொள்ள வேண்டுமென்று



''ஒரு பவுண்டு காபிக் கொட்டை எட்டு ரூபாயாக $\frac{1}{2}$ பவுண்டும் படி ஒரு ரூபாயாக $\frac{3}{4}$ படி பாலும் வீசை ரூ. 1-8-0 ஆக 10 பலம் சர்க்கரையும் சேர்ந்து என்ன ஆகும்?''

''ஏ - ஒன் காபி ஆகும்!''

---

அதற்கு ஆசை. மறுபடியும் 'வள் வள்' என்று கத்தியது.

சத்தத்தைக் கேட்டு தங்கம் ஓடி வந்தது. ''ஏய் புலியா! ஏண்டா கத்துகிறுய்?'' என்று கேட்டது. ''தங்கம்! என்னையும் விருந்துக்கு அழைத்துப் போகணும்'' என்று குதித்தது புலியன்.

''ஊஹூம்..நீ ரொம்ப நல்லவன் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனுல் வருகிற பூனைக்குட்டிகளெல்லாம் பயப்படும் என்று அம்மா சொல்கிறுள். ஆகையால் நீ அங்கே வர வேண்டாம்'' என்று சொல்லியது தங்கம்.

''தங்கம், நீயே இப்படிச் சொன்னுல் என்ன செய்வேன்? எனக்கும் உன்னேடு விருந்துக்கு வர ஆசையாக இருக்கிறது. எப்படியாவது அழைத்துப் போகத்தான் வேணும்'' என்று கெஞ்சியது.

''எப்படி முடியும்?..'' என்று ஆரம்பித்த தங்கம் புலியனின் கண்களிலிருந்து சிந்திய கண்ணீரைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தியது. புலியனிடம் அதற்கு ஆசை அதிகம்.

''புலியா! அப்படியானுல் ஒரு காரியம் செய். நீயும் பூனைக்குட்டி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு வாயேன்?'' என்று யோசனை கூறியது தங்கம்.

புலியன் சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் விழித்தது. அதற்குத் துக்கமாக வந்தது. ''நீ சுலபமாகச் சொல்லி விட்டாய்! இதோ பார், என் வாலை! எப்படி இதை மாற்ற முடியும்? எனக்குப் பூனை என்ருல் ரொம்பப் பிரியம். ஒருவரையும் கடிக்க மாட்டேன்'' என்று பரிதாபமாகக் கூறியது. இன்னெரு சொட்டுக் கண்ணீர் அதன் கண்களிலே தேங்கி கீழே சொட்டத் தயாராக இருந்தது.

தங்கத்தின் மனம் இளகி விட்டது.

''புலியா! உனக்காக வேண்டுமானுல் ஒரு காரியம் செய்கிறேன். விருந்து நடக்கப் போகும் ஹாலில் உள்ள அலமாரியில் எல்லாரும் வருவதற்கு முன்னுல் உன்னை ஒளித்து வைத்துவிடுகிறேன். தப்பித் தவறி வெளியே தலையை நீட்டிவிடாதே! பிறகு காரியம் கெட்டுப்போய் விடும். உள்ளே இருந்தே வேடிக்கை பார்த்துக்கொண்டிரு. எல்லாம் முடிந்தபின் கடைசியில் உனக்கு 'பிஸ்கட்', தின்பண்டங்கள் எல்லாம் வைத்திருந்து தருகிறேன். தின்னலாம்'' என்று சமாதானப் படுத்தியது தங்கம்.

வேறு வழியின்றி, புலியன் தன் வாலை ஆட்டிச் சம்மதத்தைத் தெரிவித்தது.

மாலை விருந்து ஏற்பாடுகள் முடிந்து, எல்லாம் தயாராக வைக்கப்பட்டன. மற்றப் பூனைக் குட்டிகள் வர சிறிது நேரத்திற்கு முன்பே, புலியனை அழைத்துவந்து அலமாரிக்குள் வைத்துக் கதவுகளை மூடியது தங்கம். ''ஜாக்கிரதை, நடுவிலே குலைத்து வைக்காதே!''

என்று எச்சரித்துவிட்டு வருபவர்களை வரவேற்க ஓடியது தங்கம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பூனைக்குட்டி மாணவிகள் எல்லாம் வந்து சேர்ந்தன. எல்லாம் உட்கார்ந்து விருந்து சாப்பிடத் தொடங்கின. எல்லாம் சத்தம் போட்டுச் சிரித்து விளையாடின. வேடிக்கைகள் செய்தன. இடை இடையே தங்கத்தைப் புகழ்ந்து பேசின. 'மியாவ், மியாவ்!' பல குரல்கள் பல ஸ்வரங்களில் ஒலித்துக்கொண் டிருந்தன. அலமாரிக் கதவுகளின் இடைவெளி வழியாகப் புலியன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே யிருந்தது.

விருந்து முடிந்தது!

''நாமெல்லாம் 'பூனையும் எலியும்' விளையாட்டு விளையாடலாமா?'' என்று கேட்டது தங்கம். எல்லாக் குட்டிகளும் 'மியாவ்' மியாவ்' என்று சம்மதத்தைத் தெரிவித்தன.

அப்பொழுது—


திடீரென்று கூட்டத்தில் ஏதோ குழப்பம் உண்டாயிற்று. ஒரு மூலையிலிருந்த பூனைக் குட்டிகள், 'மியாவ், மியாவ்' என்று மீசை துடிக்க அலறின. பல குட்டிகள் அங்குமிங்குமாக ஓடின. எங்கும் ஒரே களேபரம்.

அலமாரியிலிருந்த புலியனுக்குத் திடீரென்று பூனைக்குட்டிகள் அலறுவதற்குக் காரணம் புரியவில்லை. ''விளையாடத் தொடங்கியவை திடீரென்று கத்துவானேன்? என்ன நேர்ந்தது?'' அதற்குமேல் அதற்குப் பொறுமை இல்லை. என்ன ஆபத்தோ என்னவோ என்று கவலைப்பட்டது. தங்கத்திற்குக் கொடுத்த வாக்கையும் மறந்துவிட்டது.

அப்பொழுது—

பூனைக்குட்டிகளின் மத்தியில் சிங்கம் நின்றுகொண் டிருந்தது.

சிங்கம் பக்கத்துப் பங்களாவில் இருக்கும் நாய். சிங்கம் என்ற பெயருக்குத் தகுந்தாற்போல் அதன் முகம் பயங்கரமாக இருக்கும். பூனைகளின் விரோதி அது. புலியனைவிடப் பெரியது. புலியனுக்கு அதன் முகத்தைக் கண்டாலே பிடிக்காது. அதோடு தங்கத்தையும் மற்றத் தோழிகளையும் தாக்கும் நோக்கத்துடன் பாய்வதற்குத் தயாராக அந்தச் சிங்கம் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் புலியனுக்குக் கோபம் வந்தது.





''தயவு செய்து என் பிள்ளையை உங்கள் பள்ளிக்கூடத்திலே சேர்த்துக் கொள்ளுங்கள், ஸார்!''

''இவனுக்கு இடம் இல்லையே!''

---

புலியன் தன் நிலையை மறந்தது. தான் இருக்குமிடத்தை மறந்தது; தன்னையே மறந்தது. அதனிடமிருந்து பெரியதாக ஓர் உறுமல் சப்தம் வந்தது. அடுத்த கணம் சிங்கத்தை நோக்கிப் பாய்ந்தது அது.

மறுபடியும் குழப்பம் அதிகமாகியது. முதலில் வந்த நாயைத் துரத்திக்கொண்டு மற்றொரு குட்டி நாய் ஓடுவதைப் பார்த்த பூனைக் குட்டிகள் எல்லாம் சேர்ந்து பல குரல்களில் கதறின.

புலியன் சமயத்திற்கு வந்து சிங்கத்தைத் துரத்துவதைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டது தங்கம். புலியனின் செயலைக் கண்டு அதற்கு அதன்மீது அன்பும் ஆசையும் பெருகின. தன் தோழிகளிடம் புலியனைப்பற்றியும் அது தன் நண்பன் என்பதையும் மிகவும் நல்ல நாய்க் குட்டி, பூனைக்குட்டிகளைக் கடிக்காது என்றும் விவரித்தது.

அவைகள் எல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சிங்கத்தின்மேல் பாய்ந்தது புலியன்.

சிங்கத்திற்கும் புலியனுக்கும் பிரமாத சண்டை! உறுமிக்கொண்டு ஒன்றுடன் ஒன்று கட்டிப் புரண்டது. ஒன்றையொன்று கடித்துக் குதறியது. சிங்கமும் புலியும் சண்டை போடுவதுபோல் அவ்வளவு பயங்கரமாக இருந்தது அந்தச் சண்டை. இம்மாதிரிச் சண்டையைப் பூனைக்குட்டிகள் எப்பொழுதுமே பார்த்ததில்லை. பயத்தினால் மூலைக்கொன்றாகப் பதுங்கின. பல குட்டிகள் நடுங்கிக்கொண்டே கண்களை மூடி மூடித் திறந்தன.

எல்லாப் பூனைக்குட்டிகளும் தங்களுக்காகச் சண்டை போடும் புலியனிடம் அன்பு பாராட்டின. அடிக்கடி சத்தமிட்டுப் புலியனுக்கு ஊக்கம் அளித்தன.

சண்டை முடிந்தது!

சிங்கம் வாலைக் கால்களுக்கிடையே இடுக்கிக்கொண்டு, தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு தோல்வியடைந்த அவமானம் தாங்காமல் ஓடியது. அதன் உடம்பெல்லாம் ரத்தம் வழிந்தது. ஓடும்பொழுது காலைக்கூட நொண்டியது.

பூனைக்குட்டிகளெல்லாம், 'ஹீய்-மீய்' என்று கத்திக் கேலி செய்தன.

வெற்றி வீரனாகத் திரும்பியது புலியன். அதன் உடல் எல்லாம் காயம். காயத்திலிருந்து ரத்தம் வழிந்தது. ஒரு கண்ணில் நல்ல காயம்.

பூனைக்குட்டிகளெல்லாம் அதைச் சூழ்ந்துகொண்டன. தங்கம் ஓடி வந்து அதன் காயத்தைத் துடைத்தது.

''என்னை இனிமேலாவது உங்களுடன் விளையாட்டில் சேர்த்துக் கொள்வீர்களா?'' என்று கேட்டது புலியன்.

'மியாவ் மியாவ்' என்று எல்லாம் சந்தோஷத்துடன் குதித்தன. புலியனும் அவைகளுடன் சேர்ந்துகொண்டு குதித்து ஓடி ஆடி விளையாடத் தொடங்கியது.

'மியாவ்' சத்தத்தோடு 'வள்' சத்தமும் சேர்ந்து அந்த வீட்டையே கோலாகலத்தில் ஆழ்த்தியது.

17

# அண்ணா நீ?

கி. சாரங்கராஜன்

மத்தியான்னம் பதினொரு மணி இருக்கும்.

''அம்மா, டிரைவரைச் சரியாக இரண்டு மணிக்கு வரச் சொல்லும்மா; என் தோழிகளெல்லாம் வருவார்கள். இன்னிக்கு மூணரை மணி ஆட்டத்துக்குச் சினிமாவுக்குப் போகப் போறோம்'' என்று சித்ரா அம்மாவிடம் கூறினாள்.

ரமணி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ படித்துக்கொண்டிருந்தான். இதைக் கேட்டதும் அவன் தனக்குள் கறுவினான்.

'ஆமாம், இவள்தான் அல்லி ராணி. தனக்கு மட்டும் எல்லாம் வேணும். இவளுக்கென்று மூணு மணி ஆட்டத்துக்கு இரண்டு மணிக்கே கார் 'டாண்'னு வந்து நிக்கணும்.'

அவனுக்கு ஏற்பட்ட ஆத்திரத்துக்குக் காரணம் இருக்கத்தான் இருந்தது.


பத்து நாட்கள் முன்பு கோபால் தனது நண்பர்களுக்கென ஒரு தேனீர் விருந்து வைத்திருந்தான். சரியாக நாலு மணிக்கு ஆரம்பமென்றும், ரமணி கட்டாயம் வரவேண்டுமென்றும் அழைத்திருந்தான். கோபாலின் வீடு ஆறு மைலுக்கப்பால் இருந்தது; காரில் தான் செல்ல வேண்டும்.

ரமணி கார் ஓட்டக் கற்றிருந்தான். பதினெட்டு வயதானதும் முதல் காரியமாக கார் 'லைசன்ஸ்' ஒன்று வாங்கி வைத்திருந்தான்.

ரமணி பன்னிரண்டு மணிக்கே புறப்படுவதற்காக ஆயத்தம் செய்துகொள்ள ஆரம்பித்துவிட்டான்.

அப்பொழுது டெலிபோன் மணி கிணுகிணுத்தது. அவன் தாயாருடைய அத்தை வீடு சென்றிருந்த சித்ரா போன் பண்ணியிருந்தாள்.

''அம்மா, உன்னைப் பார்க்க என்னோடு அத்தையும் அங்கே இப்போ வருகிறாளாம். அத்திம்பேர் ஆபீஸுக்குக் காரிலே போய் விட்டார். ஆகையால் நம் டிரை



வரைக் காரை எடுத்துக்கொண்டு அத்தை வரச்சொல்கிறுள்!''

அத்தை வீடு எட்டு மைலுக்கப் பால் அந்தேரியில் இருந்தது. அம்மா டிரைவரைக் கூப்பிட்டு அந்தேரி சென்று சீக்கிரம் திரும்பிவிடும்படிக் கூறினுள். இரண்டரை மணிக்குள் வந்துசேர முடியும் என டிரைவர் கூறவே ரமணியும் சம்மதித்தான். மூன்று மணிக்கு அவன் கிளம்பினு லும் கோபால் வீட்டுக்கு அரை மணியில் போய்ச் சேர்ந்துவிடலாம் என்று அவனுக்குத் தெரியும்.

ஆனுல் போன வண்டி மணி நான்கு ஆகியும் வரவில்லை; டிரை வர் காரை ஓட்டிக்கொண்டு திரும்பிவருவான் என்று எதிர் பார்த்துச் சலித்துப் போய்விட்டது ரமணிக்கு. அவனுக்குக் கோபமும் ஏமாற்றமும் சேர்ந்து வந்தன. நாலரை ஆகியும் கார் வரவில்லை. நேரம் ஆகிவிடவே கோபாலுக்குப் போன் பண்ணி விட்டான், 'எனக்கு இன்னிக்கு ஒரே தலை வலி. ஆகவே வரமுடியவில்லை. மன்னித்துவிடு'' என்று.

கடைசியாகக் கார் ஐந்து மணிக்கு வந்து சேர்ந்தது. வரும் வழியில் காரின் ஒரு 'டயர்' 'பஞ்ச்சர்' ஆகிவிடவே புதிய டயர் போட்டுக் கொண்டு வருவதற்குள் நேரமாகிவிட்டது.

''எனக்கு அவசரமாகப் போக ணும்னு இருக்கும்போதுதான் உனக்கு அத்தையைக் கூட்டிக் கொண்டு வரணுமோ? யாரு உன்னை இன்னிக்கு வரச்சொன்னு? என் 'ப்ளான்' எல்லாம் வீணுயிடுத்தே?''

சித்ரா பதிலுக்கு, ''நான் என் னிக்கி வேணுமானுலும் வருவேன். டயர் பஞ்ச்சராச்சுன்னு என்மேலே ஏன் எரிந்து விழறே? காரைப் போய்க் கேளு'' என்றுள்.

இருவரையும் சமாதானம் செய்து வைப்பதற்குள் அவர்கள் அப்பாவுக்கும் அத்தைக்கும் வியர்த்துக் கொட்டிவிட்டது.

ரமணிக்குப் பெருத்த ஏமாற்றம். அடுத்த நாள் தனது நண்பர்களெல் லாம் 'பார்ட்டி' பிரமாதமாக இருந் தது எனப் பலவிதமாகப் புகழ்ந்த னர்.

இப்பொழுது சித்ரா தான் சினிமாவுக்குப் போகச் சீக்கிரம் டிரைவரை வரச் சொல்லும்படி அம்மாவிடம் கூறியதும், ரமணிக்கு மேற்கூறிய சம்பவம் நினைவுக்கு வந்தது.

''ஏம்மா சித்ரா தேவியாரே, இந்த வீட்டிலே நீ வச்சதுதான் சட்டம் போலிருக்கு. உனக்குக் கார் வேணும்னு டிரைவர்கூட இரண்டு மணிக்கே வந்து காத்துக்கொண் டிருக்கணும். என்ன, இங்கே அல்லி ராஜ்யம் நடக்கறதுன்னு நினைச்சுட்டியா?'' என்றுன் பட படபடப்புடன்.

சித்ரா அம்மாவிடம் முறை யிட்டாள். ''அம்மா, பாரம்மா ரமணியை! நான் அவன் கிட்டே ஒண்ணுமே சொல்லலே. என்னுேட சண்டைக்கு வருன்!''

அம்மாவும், ''ஏண்டா ரமணி, சும்மா இரேண்டா. எப்பப் பார்த் தாலும் அவளோட என்ன சண்டை வேண்டியிருக்கு? அப்பா 'டூர்' போனுலும் போனுர், சண்டை மண்டை உடைகிறது'' என்றுள்.

''ஆமாம் அம்மா, அவளுக்கு மாத்திரம் வேண்டியபோது கார் வந்து குதிக்கணும். நான் அன் னிக்கிக் கோபால் வீட்டுக்குப் போக ணும்னு நினைச்சப்போதான் இவ ளுக்கும் கார் வேணும்னு சொல்லி என் 'ப்ளானை' எல்லாம் கெடுத் துட்டாள்.''

''அதைப்பத்தியே என்னடா பேச்சு? அன்னிக்கி நடந்தது அன் னியோட போச்சு''

''ஓகோ! அப்படின்னு இன்னிக்கு நான் கோபால் வீட்டுக்குப் போறேன், காரை எடுத்துண்டு'' என்றுன்.

ரமணி டிரஸ் பண்ணிக்கொள்ள ஆரம்பித்துவிட்டான்.

''பாரும்மா போட்டிக்கு வருன்: எப்ப திரும்பி வருவான்னு கேளு.''

''அது என் இஷ்டம்'' என்றுன் ரமணி காலில் பூட்ஸை மாட்டிக் கொண்டே.

ரமணி கிளம்பி விட்டான்.

அப்பொழுது சித்ரா, ''நாழி யாச்சுன்னு டிரைவரைக் கோபால்



வீட்டுக்கு வரச் சொல்லுவேன். அவனுக்குத்தான் வீடு தெரியுமே'' என்றாள்.

ரமணி தனக்குள் சொல்லிக் கொண்டான், ''கோபால் வீட்டுக்கு நான் போனால்தானே?'' என்று!

கடுமையான வெயில். ரமணி காரை தன் இஷ்டப்படி விட்டுக் கொண்டிருந்தான். எப்படியாவது பொழுதைக் கழிக்கவேண்டுமே: இருபது நிமிஷத்தில் ஐந்து மைல் கடந்துவிட்டான். கார் ஒரு பெரிய ரஸ்தாவில் சென்று கொண்டிருந்தது. அத்தனை பெரிய தெருவில் ஓரிரண்டு பேரே சென்றுகொண்டிருந்தனர் அந்தப் பதை பதைக்கும் வெயிலிலே.

அப்பொழுது அவன் தூரத்தில் ஓர் உருவம் தள்ளாடி நடுரோட்டில் விழுவதைக் கண்டான். முதலில் தற்கொலை செய்துகொள்வதற்குத்தான் அதுமாதிரி விழுந்தானோ என்று பயந்துவிட்டான் ரமணி. மிகவும் மெள்ளக் காரை ஓட்டிச்சென்று அந்த உருவத்திற்கு இருபதடி முன்னால் காரை நிறுத்தினான். சீக்கிரம் கீழே இறங்கி அவனிடம் சென்றான். கீழே விழுந்திருந்தது ஒரு பையன். சுமார் பத்து வயது இருக்கலாம்.

யாராவது உதவிக்கு வருவார்களா என்று தெருவில் சுற்றுமுற்றும் பார்த்தான். எவனோ ஒருவன் வந்துகொண்டிருந்தான். அவன் உதவியால் பையனைக் காரில் வைத்துக்கொண்டு அருகிலிருக்கும் ஓர் ஆஸ்பத்திரிக்குக் காரை வேகமாக விட்டான். கார் ஆஸ்பத்திரியை நெருங்கும்போதே பையன் எழுந்துவிட்டான். இருவரும் காரை நிறுத்திவிட்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தனர்.

டாக்டரிடம் ரமணி நடந்ததைக் கூறினான். டாக்டர் அந்தப் பையனைப் பரிசோதித்தார்.

''ரமணி, கவலைப்படாதே. அவனுக்கு ஒன்றுமில்லை. கடும் வெயிலாலே சுருண்டு விழுந்துவிட்டான். உன் காரிலே அவனை வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிடு'' என்றார்.

இருவரும் காரைநோக்கி நடந்தனர்.

''தம்பி, உன் பேரு?'' என்று ரமணி கேட்டான்.

''பாலு'' என்றான் சிறுவன்.

''நீ இப்போ எங்கிருந்து வர்றே?''

''ஸயான் தரும ஆஸ்பத்திரிலேருந்து எங்க தாத்தாவுக்கு மருந்து வாங்கிண்டு போறேன்.''

பாலு சராய்ப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். நல்ல வேளை, பாட்டில் உடையவில்லை!

''என்ன!'' என்று திடுக்கிட்டான் ரமணி. ''மூணு மைல் நடந்தா வந்தே? பசிக்குதா?''

''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான் பாலு.

ஒரு ஹோட்டலுக்கருகில் காரை நிறுத்திப் பூட்டிவிட்டு உள்ளே சென்றனர்.

''உங்க அப்பா என்ன வேலை செய்கிறார்?'' என்று வினவினான் ரமணி, ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டே.

"எனக்குத் தாத்தா ஒருத்தரைத் தான் தெரியும். அப்புறம், எனக்கு ஒரு தங்கச்சி இருக்காள்'' என்றான் பாலு.

ரமணி புரிந்துகொண்டான்! பாலுவின் மீது அவனுக்குத் தன்னை யறியாத அன்பு ஏற்பட்டது.

''அது சரி, பாலு. உன் தாத்தாவுக்கு என்ன உடம்பு?'' என்றான் ரமணி.

''ஏதோ ஜுரம். என்னதுன்னு தெரியாது'' என்று கூறிக்கொண்டே கொஞ்சம் ஓமப் பொடியை எடுத்துத் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான்.

ரமணிக்குச் சிரிப்பு வந்தது.

''பாலு, எதுக்குப் பையிலே போட்டுக்கறே? சாப்பிட முடியலியா?''

''சாப்பிடுவேனே! அது என் தங்கச்சி பானுவுக்கு'' என்றான் இன்னும் கொஞ்சம் போட்டுக் கொண்டே.

''உன் தங்கைக்கு நான் வேறே வாங்கித் தறேன். நீ இதைச் சாப்பிடு'' என்றான் ரமணி.

மறுபடியும் ரமணி விசாரிக்க ஆரம்பித்தான்.

''பாலு, உன் தாத்தாதான் இரண்டணா கொடுத்தாரே, பஸ்ஸிலே வருவதற்கென்ன?''

''நான் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பறபோது பானு கிலுகிலுப்பை வேணும்னு அழுதாள். தாத்தாவைக் காசு கேட்டேன். தரமாட்டேன்னுட்டார். நான் வாங்கிக்கொண்டு வறேன்னு சொல்லி அவளைச் சமாதானப்படுத்திவிட்டு வந்தேன். கிலுகிலுப்பை வாங்கி வராவிட்டால் அவள் அழுவாள். அதனாலேதான் பஸ்ஸிலே வரலே'' என்றான்.

''அப்போ ஏன் கிலுகிலுப்பை வாங்கலே?''

''எங்க வீட்டுக்கு முன்னாலே ஒரு ப்ளாஸ்டிக் கடை இருக்கு. அங்கே வாங்குவேன்.''

பச்சை மனத்துடன் பாலு அளிக்கும் ஒவ்வொரு பதிலும் ரமணியின் மனத்தில் ஆணித்தரமாகப் பதிந்தது. கையில் 'பில்'லை எடுத்துக்கொண்டு எழுந்தான் ரமணி.

''பாலு, உன் தங்கை பானுவுக்கு என்ன வயசு?''

''அஞ்சு வயசாச்சு. ஆமாம். பானுவுக்கு ஓமப்பொடி வாங்கலையா?'' என்று ஞாபகப்படுத்தினான்.

இதோ இந்தப் பத்து வயது பாலகன் தனது ஐந்து வயதுத் தங்கையிடம் காட்டும் அன்பில் கால் பங்குகூட ரமணி தன் தங்கையிடம் காட்டியதில்லை. அதை நினைத்ததும் பாலுபேரில் அளவிலாத அன்பு ஏற்பட்டது.

''ஏன் பாலு, என்னோடே எங்க



கடைக்கு வந்தவர்:—என்னப்பா இது? நல்லெண்ணெய் கேட்டால், தேங்காயெண்ணெய் கொடுத்திருக்கிறாயே?

கடைக்காரன்:—இதுவும் நல்ல எண்ணெய்தானுங்க! அதிலே ஒண்ணும் 'மிஷ்டேக்' இருக்காதுங்க.

வீட்டுக்கு வறயா?'' என்று கேட்டான். இருவரும் காரில் ஏறினர்.

''உம். அப்போ பானு?'' என்றான் பாலு, சோகம் தோய்ந்த முகத்துடன்.

''அவளுந்தான் பாலு. தங்கச்சி, தாத்தா எல்லோருந்தான்'' என்றான் ரமணி.

பாலுவுக்குத் தங்கை பானுவின் மீது இருந்த அன்பு ரமணியிடம் ஓர் அதிசயத்தை நிகழ்த்தியது. தனது தங்கையைப் பற்றி நினைத்தான். 'அவளை ஏமாற்றுவதற்காகத்தானே நீ அனாவசியமாக ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தாய்? அண்ணனா நீ?' என்று கேட்டது அவன் உள்ளம்.

'மணி இரண்டரையாகிவிட்டது. டிரைவர் கோபாலுடைய வீட்டுக்குப் போயிருப்பான்—அங்கே போய் ஏமாந்திருப்பான். எல்லாம் என்னால்தானே?' என்று தோன்றியது ரமணிக்கு.

ரமணி பாலு கூறிய விலாசத்துக்கு விட்டுக்கொண்டிருந்தான் காரை. யந்திரம்போல ஓட்டிக் கொண்டிருந்தன கைகள்; அவன் மனத்தில் பெரும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

''இதோ, இந்தப் ப்ளாஸ்டிக் கடைதான். பானுவுக்குக் கிலுகிலுப்பை வாங்கிண்டு போகலாம்'' என்றான் பாலு.


கடையில் போய் கிலுகிலுப்பை மாத்திரமல்ல; என்னவெல்லாமோ விளையாட்டுச் சாமான்களையெல்லாம் வாங்கினான், பாலுவுக்கும் பானுவுக்கும் என்று. கார் பாலு வீடு வந்து சேர்ந்தது.

''பானு, இந்தா, கிலுகிலுப்பை!'' என்று கூறிக்கொண்டே சென்றான் பாலு. தாத்தாவிடம் மருந்தைக் கொடுக்கக்கூட மறந்துவிட்டான். ரமணி தாத்தாவிடம் எல்லாவற்றையும் விளக்கிக் கூறினான்.

''பாலு, நான் போயிட்டு நாளைக்கு வறேன்'' என்றான் ரமணி காரில் ஏறிக்கொண்டே.

''சரி'' என்று தலையை ஆட்டினான் பாலு. அவன் தன் பானுவுக்கு விளையாட்டுக் காட்டுவதில் அத்தனை மும்முரமாக இருந்தான்.

ரமணி காரை வேகமாக வீட்டுக்கு விட்டான். அவன் மனம்



எழுத்தாளர்:—தீமை செய்கிறவனுக்கும் நன்மை செய்கிறது என்று இந்த உலகத்திலே எங்காவது உண்டா சார்?

ஆசிரியர்:—ஏன் இல்லை? நீங்கள் எழுதுகிற கட்டுரைக்குக் கூட சம்மானம் கொடுக்கிறோமே, அது என்னவாம்?

—பி. கே. சாமி.

---

மாறிவிட்டது. பாலு—பானுவின் உடன் பிறந்த பாசம் அவனுக்கு ஒரு படிப்பினையாகி விட்டது!

தன் கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். மூன்று ஆகியிருந்தது. இன்னும் அரை மணியில் ஆட்டம் ஆரம்பமாகிவிடும்!

அதிவிரைவாகக் காரைக் காம்பவுண்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தினான்.

''சித்ரா, நாழிகையாகலையா உனக்கு?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ரமணி. அவன் குரலில் அன்பு இழைந்தது.

''அட! என்னிக்குமில்லாத கனிவு இன்னிக்கி எங்கேடாப்பா வந்தது?'' என்று ஏளனம் செய்தாள் அவன் தாய்.

''அவள்தான் உன்னோடே வீண் சண்டை போடுவானேன்னு விமலாவுக்கு 'போன்' பண்ணி, அவள் வீட்டுக் காரைக் கொண்டு வரச் சொல்லி அதில் சிநேகிதிகளோட போயிட்டாளே'' என்றாள்.

ரமணியை யாரோ சம்மட்டியால் தாக்குவதுபோல இருந்தது.

# அந்தக் கால்கள்

'கோபாசி'

'நளின நிலய'த்தில் அன்று ஒரே கோலாகலமாக இருந்தது. பிரமாதமான அலங்காரங்களும் பலவண்ண மின்சார விளக்குகளும் நிறைந்திருந்தன. காரணம் அதன் உரிமையாளர் காப்டன் மதன கோபாலின் ஒரே செல்வ மகள் நளினியின் பதினெட்டாவது பிறந்த நாள் கொண்டாட்டம் தான். யுத்த சேவைக்குச் சென்று திரும்பி வந்தவராதலால் அதை வெகு பிரமாதமாகக் கொண்டாட விரும்பினர்.

அன்று இரவு நடக்க விருந்த 'டின்னர் பார்ட்டி'க்கு நகரிலுள்ள எல்லாக் கன - தனவான்களும் அழைக்கப்பட்டு ஒவ்வொருவராக வந்த வண்ணமிருந்தனர். இன்ஸ்பெக்டர் ஈச்வரனும் வந்திருந்தார். அவர் பின்னலேயே ஒரு வாலிபனும் வந்திருந்தான். அவன் இன்ஸ்பெக்டருக்கு வேண்டியவன் போலிருக்கிறது! ஆனல் அவன் நொண்டியாக இருந்தான். 'எல்லோரும் வந்துவிட்டனர். விருந்து தொடங்கலாம்' என்று எண்ணி யிருந்த சமயம் அந்தக் கனவான் - வெகுவேகமாக ஆனல் நொண்டிக் கொண்டு - வந்தார். அவரது தோற்றம் பெரிய மிராசுதார் போலக் காணப்பட்டது.

''வாருங்கள் மிராசுதார்வாள்! ஏது இவ்வளவு நேரம்?'' என்று அவரை முகம் மலர வரவேற்று உட்கார வைத்தார் காப்டன். அவர் அமர்ந்ததும் ஒரு வேலைக்காரன் அவரிடம் ஒரு சிறு பெட்டியை - வெற்றிலைப் பெட்டி போலும் - கொடுத்துவிட்டுச் சென்றுன். மிராசுதாரும் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தார். பின்னர் நளினி எழுந்திருந்து கூடியிருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கவே எல்லோரும் அகமகிழ்ந்து மேஜை மீது இருந்த பண்டங்களில் ஆழ்ந்த வனம் செலுத்தத் தொடங்கினர்.

நளினியின் பக்கத்தில் இருந்த ஒரு பெண்மணி மட்டும் - ஏனே தெரியவில்லை - வாசலையே வெறித்து நோக்கிய வண்ணமே நின்றுகொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில்—

திடீரென்று மின்சார விளக்குகள் எல்லாம் அணைந்துவிட்டன. மேஜைகள் இடறிவிடப்பட்டன. அதன் மீதிருந்த பீங்கான் தட்டுகள் எல்



லாம் டணல் டணலென்று சிதறின. பீதி நிறைந்த பலவிதமான குரல்கள் - இவற்றினிடையில் 'வீல்' என்ற பெரும் சப்தம் கேட்டது. அதைக் கேட்டதும் காப்டனின் ரத்தம் உறைந்துவிட்டது. ஆம்! அது நளினியின் குரல்தான்!

''ஐயோ நளினி...நளினி...'' காப்டன்தான் வாய்விட்டுக் கதறினர். ஆனல் இருளில் செய்வதறியாது திகைத்து நிற்கும்பொழுது

விளக்குகள் மறுபடியும் எரிந்தன. இப்பொழுது அலங்காரமாக இருந்த அந்த ஹால் மிகவும் அலங்கோலமாகக் காணப்பட்டது. பீங்கான் தட்டுகள், உணவுப் பண்டங்கள் எல்லாம் இரைந்து கிடந்தன. கூடியிருந்த அனைவரது முகத்திலும் பயத்தின் ரேகை படர்ந்திருந்தது. இன்ஸ்பெக்டருக்குக்கூட என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''நளினி நளினி'' என்று கத்திய வண்ணம் உள்ளே சென்ற காப்டன் கால் நாழிகையில் திரும்பிவிட்டார், தலையில் கை வைத்துக் கொண்டு.

''இன்ஸ்பெக்டர் சார், நளினியின் பிறந்த நாள் கொண்டாட்டத்திலா அவள் காணுமல் போகவேண்டும்?'' என்று விசும்பலுடன் கூறிவிட்டு வாசல் பக்கம் சென்றவர் மறுபடியும், ''இன்ஸ்பெக்டர்... இங்கே ஓடி வாருங்கள்'' என்று உரக்கக் கத்தினர். எல்லோரும் விரைந்து சென்று பார்த்தார்கள். அங்கே—

மண்டையில் பலத்த அடிபட்டதால் மயங்கி ரத்தவெள்ளத்தில் விழுந்து கிடந்தான் காவற்கார கூர்க்கா. இன்ஸ்பெக்டரை வெறித்து நோக்கிய காப்டன், ''ஏன் சார், உங்களோடு வந்தானே ஒரு வாலிபன், அவன் எங்கே?'' என்று கேட்கவும் எல்லாருக்கும் அப்பொழுதுதான் புரிந்தது அவனையும் காணவில்லை என்று.

இன்ஸ்பெக்டர், ''என்னோடு ஒருவரும் வரவில்லையே'' என்று கூறிவிட்டார்.

''அப்படியானல் அவன்தான் சார், இந்த வேலையெல்லாம் செய்திருக்கவேண்டும்!''

''அவனைப்பற்றிய ஏதாவது அடையாளம் தெரியுமா உங்களுக்கு?''

''வலது காலை நொண்டிக் கொண்டு வந்தான். முகம் சற்று நீண்டு இருந்தது'' காப்டன் விளக்கிக் கூறினர்.

''இந்த ரகளையில் என் பெட்டியையும் எவனே பிடுங்கிக்கிட்டுப் போயிட்டானுங்க'' என்று - இது காறும் மௌனம் சாதித்து வந்த மிராசுதார் கூறினர்.

'இனியும் தாமதிக்கக்கூடாது' என்று எண்ணிய இன்ஸ்பெக்டர் காப்டனிடம், ''சரி, நேராக



ஸ்டேஷனுக்குச் சென்று சுற்றுப் புறம் எல்லாம் தகவல் தெரிவித்து, கார்கள், டாக்ஸிகள் எல்லாவற்றையும் மடக்க உத்தரவிடுகிறேன்'' என்று கூறி விடைபெற்று விரைந்தார். உடனே கூடியிருந்த எல்லோரும் ஒவ்வொருவராக, காப்டனுக்கு அநுதாபம் தெரிவித்துவிட்டுக் கலைய ஆரம்பித்தனர்.

* * *

நீண்டு கிடந்த அந்தச் சாலையில் கனவேகமாகப் பறந்து கொண்டிருந்தது அந்த 'பியட் 1100'. பின்னாலேயே ஏறக்குறைய அதே வேகத்தில் தொடர்ந்துகொண்டிருந்தது கறுப்பு வர்ண 'பாண்டியாக்' ஒன்று. இரண்டும் விரைவாகச் செல்லவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்தான் சென்று கொண்டிருந்தன.

கொஞ்ச தூரத்தில் சாலை இரண்டாகப் பிரிந்தது. அதில் வலது புறத்தில் திரும்பி ஒரு சிறுபாதையின் பக்கத்தில் வந்ததும் 'பியட்' நின்றது. அதனுள்ளிருந்து ஓர் உருவம் - நீண்ட கறுப்பு அங்கியணிந்து இருந்தது - இறங்கி ஒரு பெரும் சுமையை இறக்கிக் கீழே வைக்கவும் 'பாண்டியாக்' அருகில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. பாண்டியாக்கிலிருந்து இறங்கியவர் கையை ஆட்டி ஏதோ சைகை செய்யவும், பியட் உருவமும் அப்படியே செய்தது. உடனே இருவருமாக அந்தச் சுமையைத் தூக்கிக்கொண்டு ஓர் ஒற்றையடிப்பாதை வழியாகச் சுமார் மூன்று பர்லாங் தூரம் சென்று ஒரு பாழடைந்த பங்களாவை அடைந்தனர். 'பியட்' உருவம் ஆள் காட்டி விரலை மடக்கி அதன் பின்பக்கத்தால் கதவில் மூன்று முறை 'லொட் லொட்' என்று தட்டவும் கதவு திறக்கப்பட்டது. சுமையும் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டது.

''பலே கறுப்பா..சொன்னபடியே செய்துவிட்டாயே..நீதான் சாமர்த்தியசாலி... இந்தா...வெகுமதி...'' ஆம்! பாண்டியாக் நபர்தான் கூறினார் 'பியட்'டிடம்.

''என்ன எசமான்..நீங்க ஒரு வார்த்தை சொல்லி, நான் தட்டி நடப்பேனா?'' பல்லெல்லாம் வெளியே தெரியச் சிரித்தான் கறுப்பன். அவன்தான்—'பியட்' கறுப்பு அங்கிக்காரன்.

''சரி..மூட்டையை அவிழ்த்து சரக்கை வெளியே எடு'' என்று 'பாண்டியாக்' உத்தரவிடவும் கறுப்பனும் சரியென்று மூட்டையை அவிழ்த்தான். ஆனால்..அவன் முகம் ஏன் அப்படி வெளிறியிருக்கிறது? ஆம்! அவர்கள் எதிர்பாராதது நடந்துவிட்டது. அதனுள்ளேயிருந்து வெளிவந்தார் சி.ஐ.டி. சிங்காரம். வியப்பும் திகைப்பும் அவ்விருவர் விழிகளிலும் விரிந்து கிடந்தன. பேச, கத்த முயன்றனர். ஊஹூம் முடியவில்லை! நாக்கு ஒட்டிக்கொண்டது பயத்தால். அவர்கள் முகத்திற்கு எதிரே குறி பார்த்து நீட்டிக்கொண்டிருந்தது. சிங்காரத்தின் ரிவால்வர்.

''ஏதாவது செய்து தப்பிக்க எண்ணி அசைந்தீர்களோ அவ்வளவுதான். ஒரே வெடி, தொலைந்தீர்கள்'' என்று சிங்காரம் கர்ஜித்துவிட்டு அவர்களை அப்படியே பின்னாலேயே தள்ளிக்கொண்டு வாசலுக்கு வரவும் போலீஸ் லாரி ஒன்று வந்து நிற்கவும் சரியாக இருந்தது. பாண்டியாக் நபரும் கறுப்பனும் பாதுகாப்புடன் - கைகாப்பு மாட்டப்பட்டுத்தான் - லாரியில் ஏற்றிச் செல்லப்பட்டனர். சிங்காரம் சாலையில் நின்றிருந்த, 'பாண்டியாக்' கைத் தாம் எடுத்துக்கொண்டு, கான்ஸ்டபிள் ஒருவனிடம் பியட்டை எடுத்து வரச்சொல்லி விட்டு ஸ்டேஷனுக்குப் பறந்தார்.

* * *

ஸ்டேஷனில் காப்டன் மதனகோபால் இன்ஸ்பெக்டர் ஈச்வரனுக்கு முன்னால் அமர்ந்திருந்தார். சி.ஐ.டி. சிங்காரத்தைக் கண்டதும் அவரிடம் ஏதோ கேட்க எண்ணி வாய் திறந்தார். ஆனால் அதற்குள் சிங்காரம் கூறி விட்டார்.


''காப்டன்..கவலைப்படாதீர்கள், உங்கள் நளினி ஒருவித கஷ்டமுமின்றிச் சுகமாக இருக்கிறாள். அதற்கு முன் உங்களிடம்..'' என்று ஏதோ சொல்ல வந்தவர் ஒரு வாலி

பன் வருவதைப் பார்த்ததும் நிறுத்திவிட்டார்.

''இன்ஸ்பெக்டர் சார்..இதோ! இவன்தான் அன்று உங்களுடன் வந்தவன். இவனேதான் நளினியைக் கடத்தியவன்'' என்று கூறிவிட்டு, அவனைப் பார்த்து, ''ஏண்டா..என் நளினியை எங்கே கொண்டு வைத்திருக்கிறாய்? சொல்..'' என்று கர்ஜிக்கத் தொடங்கினார் காப்டன். சிங்காரம் அவரை அமைதியாக இருக்குமாறு கூறிவிட்டு அந்த வாலிபனிடம் ஏதோ ஜாடை காட்டினார். உடனே அவன் தன் முகத்திலிருந்து ஒரு பிளாஸ்டிக் முக உறையை எடுத்துவிடவும் இன்ஸ்பெக்டர், ''ஹா..நீயா? குமார்!'' என்று வாய்விட்டுக் கூறினார்—விரிந்த—வியப்பு நிறைந்த—விழிகளுடன்.

உடனே குமார்—சிங்காரத்தின் முதன்மையான உதவியாள்-இன்ஸ்பெக்டருடன் அறிமுகம் செய்து கொண்டான். சிங்காரம் விஷயத்தை விளக்கினார்.

''நேற்று குமார் பீச்சில் உலாவிக் கொண்டிருக்கும்பொழுது இரு நபர்கள்—சந்தேகப்படும் அளவில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஒரு படகு ஓரமாக நடந்து சென்று அமர்வதைக் கண்டான். அவர்களில் ஒருவன் நொண்டி. அவனை நாங்கள் நன்ருக அறிவோம்-அறியாமல் இருக்கவும் முடியாது. அவன்தான் சில தினங்களுக்குமுன் சிறையிலிருந்து வந்த கேடி சின்னப்பன். உடன் இருந்தவனும் ஒரு குற்றவாளியாகத்தான் இருக்க வேண்டும். இருவரும் என்ன பேசிக்கொள்கிருர்கள் என்று அறிய எண்ணி, குமார் பிளாஸ்டிக் முக உறையை அணிந்துகொண்டு அதே படகின் மறுபக்கம் சென்று சந்தடி செய்யாமல் உட்கார்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டான். தங்கள் மகள் நளினியைக் கிளப்பிக்கொண்டு போய் முதலில் அவள் நகைகள் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு, பிறகு அவளைக் கொண்டே தங்களை மிரட்டிப் பணம் பெறவும் திட்டம் வகுத்தார்கள். அதன்படி, 'சின்னப்பன் மிராசுதார் வேடம் பூண வேண்டியது-இன்னொருவன் அவன் வேலைக்காரனுக வேண்டியது. விருந்து நடந்துகொண்டிருக்கும் பொழுது அவன் மெயின் ஸ்விட்சை அணைத்துவிட்டு நளினியைக் கிளப்பிக்கொண்டு போக வேண்டியது.' இதுதான் அவர்கள் திட்டம்''



சிங்காரம் சற்று நிறுத்திஞர். இப்பொழுது குமார் தொடர்ந்தான்.

''பீச்சிலிருந்து வந்ததும் நான் இவரிடம் எல்லா விஷயங்களையும் கூறினேன்.



**இது ஓர் விசித்திரப் பறவை!**

'பப்பின்' என்ற இந்தப் பறவை ஒரே சமயத்தில் ஆறு மீன்களைத் தன் அலகில் கவ்விக் கொள்ளுமாம். ஒன்றைப் பிடித்த பின்னர் மற்றொன்றைப் பிடிக்க அலகைத் திறக்கும்போது முதலில் பிடித்த மீன் தப்பிவிடும் அல்லவா? அப்படி இல்லாமல் ஆறு மீன்களைக்கூட அலகில் வைத்துக் கொள்கிறதாம்!

—ஜி. கார்த்திகேயன், சென்னை-5.

---

உடனே அவர் தாம் பெண் வேடம் கொண்டு முன்பே அங்கே சென்று நளினியின் பக்கத்தில் இருப்பதாகவும், விளக்கு அணைந்ததும் நான் நளினியை விரைந்து வேறு பக்கம் இழுத்துச் சென்று விடவேண்டும் என்றும், அந்த இடத்தில் இவர் இருப்பதால் நளினிக்குப் பதில் இவரைக் கடத்திச் சென்று விடுவார்கள் என்றும் கூறினார். எனவே பிளாஸ்டிக் உறையால் என் முகத்தை நீளச் செய்து கொண்டு காலையும் நொண்டிய வண்ணம் இன்ஸ்பெக்டரின் பின்னாலேயே சென்றேன், எல்லோரும் நான் அவருக்கு வேண்டியவன் என்று எண்ணட்டும் என்னும் திட்டப்படி. எல்லோருக்கும் கடைசியில் மிராசுதாராக வந்தான் கேடி சின்னப்பன்.''

''அடபாவி!'' என்று வியப்புடன் கூறினார், இதுவரை மௌனமாகக் கேட்டுவந்த காப்டன். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தான் குமார்.

''அவன் வந்ததும் வேலைக்காரன் ஒரு பெட்டியை அவனிடம் கொண்டுவந்து கொடுத்தான் அல்லவா? அது விஷவாயு நிறைந்த பெட்டி. விளக்குகள் அணைந்ததும் அதைத் திறந்துவிட்டால் அதன் விஷத்தன்மையால் எல்லோரும் மூர்ச்சையாகி விடுவார்கள். நளினி கடத்திச் செல்லப்பட்டு வெகு நேரம்கழித்துதான் மூர்ச்சை தெளியும். அந்தச் சமயம் தானும் அங்கே இருப்பதால் ஒருவருக்கும் தன்மீது சந்தேகம் ஏற்படாது என்பது அவன் எண்ணம். ஆனால் பெட்டியை அவன் சாதாரணமாக வைக்காமல் மறைத்து மறைத்து வைத்ததால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. விளக்கு அணைந்ததும் முதலில் அந்தப் பெட்டியைப் பிடுங்கிக் கொண்டேன். பிறகுதான் நளினியை இழுத்து வந்து இன்ஸ்பெக்டரின் காரில் ஏற்றிவிட்டு நானும் உள்ளேயே இருளில் உட்கார்ந்து கொண்டேன். அவசரத்தில் வந்து ஏறியதால் இன்ஸ்பெக்டர் இதைக் கவனிக்கவே இல்லை.''

இன்ஸ்பெக்டர் லேசாக முறுவல் செய்துகொண்டார்.

''பின்னர் வெளியில் சென்ற பியட்டை நான் கவனித்து வைத்துக் கொண்டதால் உடனே போலீஸ் லாரிக்குத் தகவல் கொடுக்க மிகவும் உதவியாக இருந்தது. நளினியும் துன்பமின்றி இருக்கிறாள்.''

அப்பொழுது, ''அப்பா'' என்று கத்திக்கொண்டே ஓடிவந்த நளினியைத் தழுவிக்கொண்டே காப்டன், ''அம்மா, நளினி'' அந்தக் கால்கள் சின்னப்பனைக் குமாருக்குக் காட்டிக் கொடுத்திராவிட்டால் உன்னை எப்படியம்மா நான் மறுபடியும் பார்க்க முடியும்?.. அந்தச் சிங்காரம், குமார் இருவருக்கும் நம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள், அம்மா.. நளினி'' என்று தழுதழுத்தக் குரலில் கூறவும் நளினியும் அப்படியே தன் இரு கரங்களையும் குவித்து வணக்கம் செலுத்தினாள். முடிவில் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு 'நளின நிலைய'த்துக்கு விரைந்தனர் காப்டனும் நளினியும்.



# ஆண்டிகள் மாநாடு

அ. பிச்சை

1

சமயம்: ஞாயிற்றுக்கிழமை

பாத்திரங்கள்:

சுப்பு ஆண்டி:

குப்பு ஆண்டி:

இடம்: தெருக்கோடி.

சுப்பு: அண்ணே குப்பாண்டி..

குப்பு: (கோபமாக) இதோ பாரு சுப்பு, இனிமே இந்த ஆண்டிப் பட்டமே வேண்டாம்!

சுப்: ஏன் குப்பாண்டி?

குப்: பாத்தியா? ரொம்ப மேலே போறியே!

சுப்: ஏன்?

குப்: இனிமே இந்த மாதிரிச் சொல்லாதே!

சுப்: நான் மட்டும் சொல்லாம லிருந்தா போதுமா?

குப்: இல்லே சுப்பு! இனிமே நம்ம சிநேகித ஆண்டிகளேயும் ஒரு வரும் ஆண்டின்னு சொல்லக் கூடாது!

சுப்: சொல்லாமலிருக்க வழி..?

குப்: அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன்.

சுப்: (ஆச்சரியமாக) ஏதேது! உனக்கு 'இங்கிலீஸ் பீஸ்' கூடத் தெரியுமா?

குப்: ஹூம். பிச்சையெடுக்கப் போறப்போ இதே வார்த்தையைக் கேட்டுப் பழக்கம்.

சுப்: அது சரி. அது என்ன வழி...?

குப்: 'ஆண்டிகள் மகாநாடு' என்று ஒரு மகாநாட்டை ஆரம் பிக்க வேண்டும்..

சுப்: பலே! அப்ப தலைவரு யாரு?

குப்: நம்ம 'ஆறுமுக ஆண்டி'யை வைத்துவிட்டாப் போச்சு.

சுப்: அது சரி, மேடை அமைக்க ணும். மாலை போடணும். இதுக் கெல்லாம் பணம்..?

குப்: மேடை எதுக்கு? நம்ம ஊர்ச் சுடுகாட்டுக்கு அருகிலிருக் கும் ஆலமரத்தடியிலேயே மகாநாடு கூடிவிடலாம்!

சுப்: அண்ணே! ஒனக்கு மூளை நல்லா வேலை பண்ணுது! என்னிக்கு மகாநாடு கூட்டலாம்?

குப்: நாளை திங்கட்கிழமை மாலை நாலு மணியளவில் கூடலாம். நான் வருகிறேன்; நீ எல்லாரிடமும் சொல்லிவிடு.

சுப்பு: ஆகட்டும். (போகிறான்.)

2

திங்கட்கிழமை.

இடம்: ஆலமரத்தடி.

பாத்திரங்கள்: தலைவர், குப்பாண்டி, சுப்பாண்டி மற்றும் பல ஆண்டிகள்!

(தலைவர் ஆறுமுக ஆண்டி வந்து ஆசனத்தில் மண்மேட்டில் அமருகிறார். குப்பாண்டி ஒரு கத்திரிக்காய் மாலை போடுகிறான். ஒரே கரகோஷம்.)

குப்பு: தலைவரவர்களுக்கும், மற்றும் எனது நண்பர்களுக்கும் நன்றி! இனிமேல் நாம் பிச்சையெடுக்கக்கூடாது! உழைக்க வேண்டும் இப்பொழுது. 'நைஞ பைசா' என்று இல்லை இல்லை 'நயா பைசா' என்ற நாணயம் வந்திருக்கிறது. அதை நாம் வெறுக்க வேண்டும். எனக்குப்பின் பலர் பேசவிருக்கின்றனர்.

வணக்கம்.

(பேசி முடிக்கிறான். பிறகு 'சுப்பாண்டி' வெண்டைக்காயும் சுண்டைக்காயும் கலந்த காய்கறி கதம்ப மாலையணிவிக்கிறான். ஒரே கரகோஷம்)

சுப்: தலைவரே! நண்பர்களே! வணக்கம்.

ஆண்டிகளென்று பலர் நம்மை அழைக்கின்றனர். பிச்சைகேட்டால் 'மிஞ்சி விட்டதே!' என்கின்றனர். மிஞ்சி விட்டதைப் போடுங்கள் என்றால் செருப்பு வேணுமா என்கின்றனர். இந்த வெயிலுக்கு செருப்பும் தேவை. அதாவது கொடுங்கள் என்றால் தண்ணீரை ஊற்றுகிறார்கள். ஊற்றுவது தான் ஊற்றுகிறீர்கள்! நிறைய ஊற்றினால் குளித்து விடலாம் என்றால் கண்டபடி ஏசுகின்றனர். ஆகவே நாம் உழைக்க வேண்டும். இந்தப் பிழைப்பு உதவாது.

(பேசி முடிக்கிறான். ஒரே கர கோஷம். பிறகு முனியப்பாண்டி பேசுகிறான்.)

முனி: தோழர்களே! நம்மைத் தவிர மற்றவர்களனைவரும் பேய்கள். பிச்சை கேட்டால் சமையல் ஆகிக்கொண்டிருக்கிறது என்று சொல்கின்றனர். அவர்கள் சொல்லும் விதத்தைப் பார்த்தால் சமையல் முடிந்தபின் போடுவார்கள் போலிருக்கிறது; 'அப்படியா, சமையல் முடிந்தபின் வரட்டுமா?' என்றால் நம்மை ஏசுகின்றனர். ஆகவே இனி நாம் பிச்சையெடுக்கக் கூடாது. அடுத்து வரும் தேர்தலிலே நாம் ஈடுபட்டு நம் குரலைச் சட்ட சபையில் ஒலிக்கச் செய்யலாம்!

(பேசி முடிக்கிறான். ஒரே கர கோஷம்! அப்பொழுது ஓர் ஆண்டி கையை நக்குகின்றான். எல்லா ஆண்டிகளும் அவன் வாயையே நோக்குகின்றனர்.)

வந்தவன்: (கையை நக்கிக் கொண்டு) கோடித்தெருவிலே ஒரு கல்லாணம். அங்கே ஆண்டிங்களுக்காகச் சாப்பாடு போடுறாங்க. அங்கே நம் ஆண்டிகள் ஒருவரையும் காணோம்! நான் நிறையச் சாப்பிட்டேன்.

(அவ்வளவுதான்! எல்லோரும் ஓடிவிடுகின்றனர். சுப்பாண்டியும் குப்பாண்டியும் நிற்கின்றனர்)

சுப்: குப்பு! என்ன இது எல்லாரும் ஓடிவிட்டாங்களே!

குப்: என்ன பண்ணறது? (திடீரென்று) அடக் காலிப்பயலே!

சுப்: என்ன குப்பு?

குப்: கத்தரிக்காய் மாலையையும் கதம்பக் காய்கறி மாலையையும் தூக்கிக் கிட்டுப் போயிட்டானுவ! சரி. வா போகலாம்!

சுப்: எங்கே?

குப்: அந்தக் கல்யாண வீட்டுக்குத்தான்!

திரை

# மாமா வந்தார்!

டி. ஆர். தியாகராஜன்

## காட்சி-1

(பகல் ஒன்பது மணி. சதானந்தத்தின் வீடு. சதானந்தம் பேப்பர் படித்துக்கொண் டிருக்கிறார். அவர் குழந்தைகள் ரகு, பாபு, ராஜி ஆகியோர் பாடம் படித்துக்கொண் டிருக்கின்றனர். வெளியே, 'ஸார் தபால்' என்று குரல் கேட்கிறது.)

ரகு: டேய், தபால்டா! இதோ வாங்கிண்டு வறேன்! (ஓடுகிறான்)

பாபு: ஏய், ஏய்! நான்தான் வாங்குவேன். (அவனும் ஓடுகிறான்)

ராஜி: நான்தான் வாங்குவேன்! (அவளும் ஓடுகிறாள்)

(இதற்குள் ரகு கவரை வாங்கிக் கொண்டு வருகிறான். பாபுவும் ராஜியும் அதைப் பிடுங்க முயல்கின்றனர்.)

சதானந்தம்: டேய் ரகு! இங்கே கொடுடா! (வாங்கிப் படிக்கிறார்) டேய் பசங்களா!.. உங்கள் மாமா புதன்கிழமை வருகிறாராம்!..

(அம்மா சமையலறையிலிருந்து வருகிறாள்.)

அம்மா: யாரு? என் தம்பி ரவி சந்தர் வருகிறானா?..

சதா: ஆமாம்.

அம்: ரகு, பாபு! உங்களுக்கு ரவிசந்தர் மாமாவைத் தெரியுமாடா?..கான்பூரிலே ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். நீங்கள் சின்னக் குழந்தைகளாக இருக்கும் போது அவனைப் பார்த்தது! உங்கள்மீது அவனுக்குக் கொள்ளை பிரியம்! ரகு பிறந்தபோது - அதாவது 1942-இல் பெரிய காந்தி பக்தன் என்று பெயர் வாங்கினான்.

ரகு: பலே பலே! எனக்கு இப்பவே மாமாவைப் பார்க்கவேணும் போலிருக்கு..ஏம்மா! மாமா எனக்குக் 'கிரிக்கட் பாட்' வாங்கிவருவாரோ? வாங்கிவந்தால் அவரோடு நம் தோட்டத்திலே கிரிக்கட் விளையாடப் போகிறேன்!..

பாபு: போடா போடா! நம் ரவிசந்தர் மாமா வந்தால் நல்ல காரம்போர்டு வாங்கிக்கொடுக்கச் சொல்லி விளையாடவேணும்!..

அம்: ஏன்னா! எப்போது வருகிறான்? அவனுக்கு இந்த ஊரே தெரியாதே?..

சதா: புதன்கிழமை காலை எட்டு மணி வண்டிக்கு வருகிறானும்.,நான் ஸ்டேஷனுக்குப் போய் அழைத்து வருகிறேன்..

ரகு: வேண்டாம், அப்பா! நான் போகிறேன்.

பாபு: இல்லையில்லை...நான் போய் அழைத்துக் கொண்டு வருகிறேன்.. சூட்டும் கோட்டுமாக டிப்டாப்பாக வரும் மாமாவை அழைத்துக் வருவதே தனிப் பெருமை!..

சதா: சரி நீங்கள் இருவருமே போய் அழைத்து வாருங்கள்!

ரகு: நான் இப்பொழுதே போய் என் 'பிரெண்ட்ஸ்' கிட்டே சொல்லிவிட்டு வரப்போகிறேன்!..

பாபு: நானும்தான்.

(இருவரும் வெளியில் போகிறார்கள்)

## காட்சி-2

[புதன்கிழமை காலை ஏழு மணி. ரகுவும் பாபுவும் ஜோராக டிரஸ் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.]

ரகு: அம்மா! காபி குடிச்சாச்சு! நான் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறேன்.

பாபு: நானும் போய்வருகிறேன், அம்மா!

அம்: டேய் ரகு, பாபு! ஜாக்கிரதை..ஸ்டேஷனிலிருந்து மாமாவைக் கவனமாக அழைத்துக் கொண்டு வாருங்கள். வேறு யாரை யாவது மாமா என்று அழைத்து வந்து நிற்கப் போகிறீர்கள்..!

பாபு: போம்மா..! எங்களுக்கா தெரியாது?..ஜில்லென்று பஸ்டகி

ளாஸிலிருந்து வேறு யார் இறங்கப் போகிருர்கள் நம்ம மாமாவைத் தவிர? (கிளம்புகிருர்கள்)

ராஜி: டேய் ரகு..என்னையும் அழைத்துக்கொண்டு போடா!

பாபு: (மிடுக்காக) போடி..நாங்கள் பெண் பிள்ளைகளோடு போக மாட்டோம்!....வீட்டுக்கு வந்தால் பார்த்துக்கொள்ளேன் மாமாவை!

ராஜி: சரி. நீங்கள் அழைத்துக் கொண்டு போகவேண்டாம்! நான் தனியாக வருகிறேன் பின்னுலே!..

ரகு: (சினத்துடன்) என்ன!.. வந்தால் தெரியும்! சே!..டேய் பாபு! வா, நாம் ஓடிவிடலாம்!

(இருவரும் வேகமாக ஓடிவிடு கிருர்கள். ராஜியும் விடாது பின் தொடர்ந்து ஓடுகிருள்.)

(வேகமாக ஓடின ரகுவும் பாபுவும் நிற்கிருர்கள், கடைத் தெரு வந்தவுடன்.)

ரகு: டேய் பாபு! ராஜி வருகிருளா, பாருடா பின்னுலே..!

பாபு: (பின்னுல் பார்த்து) ரகு! அதோ ஓடிவருகிருளே புத்தகக் கடைகிட்டே..ஓடு!

(இருவரும் மீண்டு ஓடுகிருர்கள். இரண்டு பர்லாங் தூரம் ஓடினதும் பாபு நிற்கிருன்.)

பாபு: ரகு, சற்று இருடா! இந்த ஓட்டலிலே மணி பார்க்கலாம்.

ரகு: அடடா! மணி எட்டு அடிக்க ஐந்து நிமிஷம்டா! இன்னும் ஒண்ணரைமைல் இருக்கே ஸ்டேஷன்!..ஓடணும்டா போட் மெயில் வேகத்திலே!..

(கனவேகமாக ஓடுகிருர்கள். அரைமைல் ஓடியதும் ரெயில் ஊதும் சத்தம் கேட்கிறது.)

பாபு: அடாடா..ரெயில் வந்துவிட்டதுடா..ராஜி வேறு பின்னுல் ஓடி வருகிருள்..உம், ரன் அப்!

(எதிரே ஒருவர் கதராடை தரித்து கையில் ஒரு பெட்டியுடன் வருகிருர்.)

மனிதர்: தம்பிகளா! சற்று நில்லுங்கள்!..பங்காரு முதலித் தெரு எங்கே யிருக்கு?..

பாபு: போய்யா போ!..நாங்கள் அவசரமாக ஓடுவது தெரியவில்லே?..டேய் ரகு! டைம் வேஸ்ட் ஆகிறது..சீக்கிரம் ஓடு ஸ்டேஷனுக்கு....

மனி: அடேயப்பா! என்ன துடுக்குடா இந்தப் பசங்களுக்கு!..
(நடக்கிருர்)

(ரகுவையும் பாபுவையும் பின் தொடர்ந்து ஓடிவந்த ராஜி மேலே போவதா, வேண்டாமா என்று யோசிக்கிருள். அப்பொழுது அந்த மனிதர் அவளைச் சந்திக்கிருர்.)

மனி: ஏம்மா..பங்காரு முதலித் தெரு எங்கே இருக்கு?

(ராஜி அம்மனிதரை ஏற இறங்கப் பார்த்து ஸ்தம்பித்துப் போகிருள்.)

ராஜி: பங்காரு முதலித் தெரு தானே, நீங்கள் சதானந்தம் வீட்டுக்குத்தானே போகணும்?

மனி: (வியப்புடன்) அடடே! ஆமாம்..உனக்கு எப்படித் தெரிந்தது?..நீ யாரு?

ராஜி: மாமா! நான்தான் உங்கள் மருமாள்...ராஜி.

மனி: அடே! நீ மீனுட்சி அக்காள் பெண்ணு? இந்தா..ஸ்டே



ஷனில் வாங்கினேன்! (ஒரு மிட்டாய்ப் பொட்டலத்தைத் தருகிறார்) ராஜி, ரகுவும் பாபுவும் சௌக்கியமா?

ராஜி: (வியப்புடன்) நீங்கள் அவர்களை வரும் வழியில் பார்க்கவில்லை?

மாமா: நான் ஒருத்தரையும் பார்க்கவில்லையே!..ஏதோ இரண்டு பையன்களைப் பங்காரு முதலித் தெரு எங்கே இருக்கிறதென்று விசாரித்தேன். அவர்கள் அமுத்தலாகப் பதில் சொல்லிவிட்டு ஓடினார்கள்...

ராஜி: மாமா! அவர்களில் ஒருவன நீல டிரௌஸரும் இன்னொருவன் காக்கி நிஜாரும் போட்டிருந்தார்களா?

மா: ஆமாம். அவர்களேதான்!

ராஜி: அவர்கள்தான் ரகுவும் பாபுவும்.

மா: என்னது? அந்தப் போக்கிரிப் பசங்களா? சரி. வா போவோம்! (ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு ஏறிக் கொள்கின்றனர்.)

(ரகு, பாபு இருவரும் ஸ்டேஷனில் மாமாவைக் காணுமல் ஏமாற்றத்துடன் பங்காரு முதலித் தெருவில் நுழைகின்றனர்.)

ரகு: டேய் பாபு! அதோ பாருடா..நம் வீட்டிலிருந்து ஒரு டாக்ஸி கிளம்புகிறது!..ஒரு வேளை நம் மாமாதான் நமக்கு முன் வந்து விட்டாரரோ என்னவோ?..

பாபு: சேச்சே!..இருக்காது. நமக்குத் தெரியாமல் எப்படி வந்திருக்கமுடியும்? பக்கத்து வீட்டு ரங்கனின் அத்தான் வருவதாகச் சொன்னர்களே....ஒரு வேளை அவர் வந்திருப்பார்!

ரகு: சரிதான்!

(வீட்டையடைந்து இருவரும் படியில் கால் வைக்கின்றனர். ராஜி வருகிருள்.)



ராஜி: (விஷமச் சிரிப்புடன்) மாமா எங்கேடா?

ரகு - பாபு: போடி.... மாமா வரவேயில்லை... நம்மை ஏமாற்றிவிட்டார்! (உள்ளே நுழைகின்றனர்.)

ராஜி: போங்க உள்ளே. ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருக்கு!

(உள்ளே நுழைந்ததும் அவர்கள் தாங்கள் வழியில் கண்ட மனிதர் கூடத்தில் பெட்டியைத் திறந்து கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிடுகின்றனர்.)

அம்: டேய் ரகு, பாபு! இங்கே வாங்கோடா!.. ரவிசந்தர் மாமா வந்திருக்கார்....நமஸ்காரம் பண்ணுங்கோ.

ரகு - பாபு: ஹா!.... இவரா நம் மாமா?

ரகு: மாமா! தெரியாமல் செய்துவிட்டோம். ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் நீங்கள் பாண்ட்டும் கோட்டுமாக வருவீர்கள் என்று எதிர்பார்த்துப்




கும்போது மாமா உங்களுக்குக் கிரிக்கட் பாட், பந்து, காரம் - போர்டு எல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்! . .

(ரகுவும் பாபுவும் கண்களில் நீர் ததும்பப் பெற்றுக் கொள்கிறார்கள்.)

மா: (புன்சிரிப்புடன்) ரகு! பாபு! போனால் போகிறது. நீங்கள் சிறு குழந்தைகள்தானே?

ராஜி: நான் எப்படித் தெரியுமா மாமாவைக் கண்டு பிடித்தேன்? அம்மா தபால் வந்த தினம் 'மாமா பெரிய காந்தி பக்தர், சுதந்தரக் கிளர்ச்சியில் பங்கு கொண்டவர்' என்று வர்ணித்ததை ஞாபகம் வைத்துக் கொண்டேன்! இன்று இவருடைய கதராடையைப் பார்த்ததும் மாமா என்று நிச்சயம் செய்தேன்!

அம்: ராஜி கெட்டிக்காரி!

மா: (சந்தோஷத்துடன்) அதனால் தான் பாபுவுக்கும் ரகுவுக்கும் தலைக்கு ஒரே ஒரு பரிசு. . ராஜிக்கு இரண்டு பரிசு! (ராஜியைப் பார்த்து) இந்தா, ராஜி! வாட்சும் பிளாஸ்டிக் குடையும்! (கொடுக்கிறார்.)

பிசகு செய்துவிட்டோம்! . . மன்னித்துக்கொள்ளுங்கள்.

பாபு: மாமா! அவசரத்தில் மரியாதையின்றிப் பேசிவிட்டோம்!

அம்: என்ன இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்?

(விஷயத்தை ராஜி சொல்லிச் சிரிக்கிறாள்.)

அம்: டேய் ரகு, பாபு! நீங்கள் இவ்வளவு தப்புச் செய்திருக்

---

ஸர் கிரிஸ்டாபர் ரென் என்ற இந்த ஆங்கிலேயர் கட்டிடக் கலையில் வல்லவர். தமது 78-ஆவது வயதில் செயின்ட்பால் கதிட்ரல் என்ற மாதா கோயிலின் உச்சியைப் பார்வையிட கூடையில் வைத்து எடுத்துச் செல்லப் பட்டார்.

—ஜி. கார்த்திகேயன், சென்னை-5.



# பேனா நண்பன்

நடேஷ்

“சேது!” என்று தபால்காரரின் குரல் கேட்டது. அறையில் ‘கண்ணன்’ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த சேது வாசலுக்கு ஓடிவந்து தபால்காரரிடமிருந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு தன் அறைக்கு வந்தான்.

அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால், சில நாட்களுக்கு முன்புதான் சிறுவர் பத்திரிகை ஒன்றிற்குக் கதை ஒன்று எழுதி அனுப்பியிருந்தான். அவன் அதைப் பற்றிய செய்தியோ என எண்ணினான். கவரைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்தான். அவன் எதிர்பார்த்தபடி கதையைப் பற்றிய செய்தியாக இருக்கவில்லை. அவன் ஆருயிர் பேனா நண்பன் கேசவன் எழுதியிருந்தான். கடிதத்தை ஆவலுடன் எடுத்துப் படித்தான் சேது.

“அன்புள்ள சேதுவுக்கு,

உன் அருமைப் பேனா நண்பன் கேசவன் எழுதியது. லட்சம் வணக்கங்கள். தற்போது எங்களுக்குப் பள்ளி விடுமுறை நாட்கள் என்று உனக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். இந்த விடுமுறை நாட்களை உங்கள் மதுரையில் கழிக்கலாமென எனக்கு எண்ணம். அதுமட்டுமல்ல; மதுரையில் உன் வீட்டிலேயே...” அதற்குமேல் சேதுவால் படிக்க முடியவில்லை.

அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ‘பாழாய்ப்போன பேனா நண்பன் இருந்திருந்து நம் மதுரைக்குத்தானா வரவேண்டும்? வந்துவிட்டுப் போகட்டும்! அதிலும் வீட்டில்தானா தங்க ஏற்பாடு செய்யச் சொல்லவேண்டும்?..மதுரையில் என்னைத் தவிர எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்? ஏன், கோடிவீட்டுச் சீனுவுக்கு எழுதுவது தானே? இல்லாவிட்டால் கோணவாய்க்கால் சந்து கோபுவுக்கு எழுதினாலென்ன, குடியா முழுகிப் போய்விடும்? இங்கே எனக்குச் சினிமா பார்க்கவே பணம் தர மாட்டேனென்கிறார்கள் வீட்டில். அதுவும் இந்தச் சமயத்தில் புதுப் புதுப் படங்கள் ரிலீசாகிக் கொண்டிருக்கின்றன. நிலைமை இப்படியிருக்கும்போது இவன் வேறு வந்துவிட்டால்..?.. காபி ஹோட்டலுக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டும்; சினிமா, டிராமா.. இவைகளுக்கெல்லாம் பணம் தருவது யார்? அதுவும் இந்த மாதத்தில் போதாக்குறைக்குப் பொருட்காட்சி வேறு வந்துவிட்டது..ம். .என்ன செய்யலாம்!’ என்று சொல்லிக்கொண்டே முகத்தில் கையை வைத்துக்கொண்டு யோசனை செய்ய ஆரம்பித்துவிட்டான் சேது.

‘ஒன்றும் வாங்கித் தராவிட்டால் அவர்கள் ஊரில் என் மானத்தைக் கப்பலேற்றிவிடுவானே....ம்.... ..சரி அம்மாவிடம்தான் கேட்டுப் பார்ப்போம்!’ என்ற முடிவுக்குக் கடைசியாக வந்தான்.

* * *

“சேது..சேது” என்ற அவன் தாயின் குரலைக் கேட்டு நாற்காலியோடு அப்படியே திரும்பி, “என்ன அம்மா?” என்றான். “ரசம் கொதிக்கிறது; காலணாவுக்குக் கருவேப்பிலையும் கொத்தமல்லியும் வாங்கிக் கொண்டு வா, போ. ஒரு நொடிக்குள் வந்துவிடு” என்று ஆணையிட்டு விட்டுச் சமையலறைக்குள் சென்றுவிட்டாள். சேது முன் போல் ‘முடியாது’ என்று சொல்லவில்லை. பேசாமல் அம்மா கொடுத்த காசை வாங்கிக்கொண்டு, “அம்மா, நான் வாங்கிவரத் தயார். ஆனால் ஒரு விஷயம் உன்னிடம் சொல்லவேண்டும். போய் வந்து சொல்கிறேன்” என்று சொல்லிக்

கொண்டே மார்க்கெட்டை நோக்கி வேகமாக ஓடினுன். கையில் கருவேப்பிலைக் கொத்தமல்லியுடன் வந்து அம்மாவிடம் கொடுத்து விட்டு, ''அம்மா நான் ஒரு விஷயம் சொல்லவேண்டுமென்று சொன்னேனல்லவா! சொல்லட்டுமா?''

''சொல்லேன். அதற்கென்ன பீடிகை!'' என்ருள் அம்மா.

சேது மெதுவாக, ''அம்மா, சென்னையிலிருக்கும் என் பேனு நண்பன் கேசவன் என்று ஒருவன் மதுரைக்கு வரப்போகிருனும்..'' என்று தொடங்கினுன்.

''வரட்டுமே..அதற்கென்ன இப்போது?''



''அதற்குத்தானம்மா இப்போது சொல்கிறேன். நம் வீட்டில் தங்க ஏற்பாடு செய்யச் சொல்லி எழுதியிருக்கிருன்.''

''பூ..இதற்குத்தானு இப்படிப் பயப்படுகிருய்?..அதற்கென்ன உன் அப்பாவிடம் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது''என்று அம்மா உடனே சொல்லிவிட்டாள். எல்லாம் மகனைத் திருப்திப் படுத்தத்தான்.

அம்மா ஒப்புக்கொண்டவுடன் சேதுவுக்குப் பரம சந்தோஷம். ஆனுலும் உள்ளூற இன்னும் பயம் இருக்கத்தான் செய்தது. 'ஒரு கண்டம் தப்பித்தாயிற்று. இனி மற்ருெரு பெரிய கண்டத்தைத் தாண்டவேண்டுமே! ...அப்பா விடம் கேட்டுத்தானே ஏற்பாடு செய்யவேண்டும்?..'என்று நினைத்துக்கொண்டே பெருமூச்சுவிட்டான் சேது.

* * *

சேது வீட்டின் முன் ஹாலிவிருந்த கடிகாரம் டாண்..டாண் என்று இருமுறை அடித்தது. அப்பா ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வரும் நேரம் அது. சிறிது நேரத்தில் அப்பாவும் வந்துவிட்டார். சாப்பா

டெல்லாம் ஆயிற்று. வெற்றிலைத் தட்டை அருகில் வைத்துக் கொண்டு வெற்றிலை போட ஆரம்பித்தார் அப்பா.

அப்பாவின் அருகில் வந்தாள் அம்மா. சேது தன்னிடத்தில் சொன்ன விஷயத்தைச் சொன்னாள். அவரோ முன்கோபக்கார அப்பா.

''அதெல்லாம் முடியாது, பேனா நண்பனே, பென்சில் நண்பனே! அவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்க இது ஒன்றும் சத்திரமில்லை. போய் உன் வேலையைப் பார். அந்தப் பயல் என்னிடம் கேட்க வரட்டும், நான் சொல்லிக் கொள்கிறேன்'' என்று பளிச்சென்று சொல்லிவிட்டார்.



கதவோரத்தில் நின்றுகொண்டு கேட்டுக்கொண் டிருந்த சேதுவுக்கு அப்பாவின் வார்த்தைகள் கன்னத்தில் பளீரென்று அறைந்தது போல் இருந்தன. அப்பாவைக் கண்டபடி மனத்துக்குள்ளேயே திட்ட ஆரம்பித்தான்.

சேது தன் திட்டம் தரைமட்டமாகிவிட்டதை நினைத்து வருத்தப்பட்டான். உடனே கேசவனுக்கு ஒரு லெட்டர் எழுதினான்.

''அன்புள்ள கேசவா,

உனக்குக் கோடி வணக்கங்கள். உன் கடிதம் கிடைத்தது. நீ மதுரை வருவதைக் குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீ ரொம்ப ஜாலியாக மதுரையில் விடுமுறை நாட்களை என்னுடன் கழிக்க விரும்புகிறாய் என எண்ணுகிறேன். ஆனால் நண்பா, நான் மதுரையில் இப்போது இல்லை. கல்கத்தாவில் என் மாமா வீட்டிற்குக் கோடை விடுமுறை நாட்களைக் கழிக்கச் சென்றிருக்கிறேன். ஆகையால் உன்னைக் கவனிக்க முடியாது போனதற்கு வருந்துகிறேன். மன்னிக்கவும். உன் அன்புமிக்க,

சேது.''

கடிதம் கேசவனின் கையில் கிடைத்தது. ஆவலுடன் நண்பனின் பதில் கடிதத்தைப் பிரித்தான். கடிதத்தில் கண்ட முதல் இருவரிகளையும் படித்துவிட்டு ஒரே குதியாய்க் குதித்தான். 'நண்பனென்றால் இவனல்லவா நண்பன்?' என்றெல்லாம் பலவாறு சேதுவைப்பற்றிப் புகழ்ந்து பாட ஆரம்பித்தான். மூன்றாவது வரியைப் படித்தானோ இல்லையோ அவன் தலை 'கிறுகிறு' என்று சுற்ற ஆரம்பித்துவிட்டது.

'மடப்பயல்! துரோகம் செய்துவிட்டான். இவனெல்லாம் ஒரு நண்பனா? நாய்கூட நன்றியை மறக்காது. அதைவிடக் கேவலமானவன். மடையன்' என அடுத்த கணம் வசைமாரி பொழிய ஆரம்பித்தான். சற்று நேரத்திற்கு முன்பு புகழ்ந்த அதே கேசவனின்



ஜோஸப் பாட்ஸ் என்ற இவர் அறுபது வருட காலமாகத் தினந்தோறும் விடியற்காலையில் 3-30 மணிக்கு எழுந்திருந்து தம் வேலையைக் கவனித்து வந்திருக்கிறார். பரீட்சைக்குப் பத்து நாட்கள்கூட விடியற்காலை எழுந்திருக்க முடியாத நமக்கு இவர் ஞாபகம் எப்போதும் இருந்தால் எவ்வளவோ நல்லதுதானே!

—ஜி. கார்த்திகேயன், சென்னை-5.

வாய் இப்போது இகழ ஆரம்பித்து விட்டது:

'கல்கத்தாவில் அவனுடைய மாமா வீட்டிலிருக்கிறானாம். மதுரையிலிருந்து கொண்டு கல்கத்தாவிலிருக்கிறேன் என்று எழுதிவிட்டான் சற்றும் யோசனையின்றி" என்று தொடர்ந்து அவன் வாய் வசைமாரி பொழிந்துகொண்டேயிருந்தது.

இவ்வாறு கேசவன் சென்னையில் தன் வீட்டில் திட்டிக்கொண்டிருந்த அதே சமயத்தில் மதுரையில் தன் வீட்டிலிருந்த சேதுவுக்குத் திடீரென விக்கல் எடுத்தது. பாவம்! அப்போதுதான் அவன் தான் கேசவனுக்குக் கடிதத்தில் எழுதிய முட்டாள்தனமான தவற்றை உணர்ந்தான். அவசியம் நேர்ந்தால் பின்பு உண்மை நிலையை விளக்கி மீண்டும் கேசவனுக்கு ஒரு கடிதம் எழுதிவிடலாம் என்று பேசாதிருந்தான்.

சிலநாட்கள் கழித்துக் கேசவனிடமிருந்து சேதுவுக்குக் கடிதம் வந்தது. அதில்,

''நண்பா, நான் உண்மையில் மதுரைக்கு வரலாமென எண்ணினேனே தவிர, என் அப்பா தடுத்துவிட்டார். என் கடிதத்தின் பிற்பகுதியை நீ படிக்கவில்லைபோலிருக்கிறது. நான் கல்கத்தாவுக்குத்தான் போகிறேன், அத்தைக்குத் துணையாக. நீ மதுரையில்தான் இன்னமும் இருப்பாய் என்று தெரியும். அதனால்தான் மதுரைக்கே எழுதுகிறேன். நீ என்னை ஏமாற்ற நினைத்தாய். உன் கடிதம் உன்னையே ஏமாற்றிவிட்டது. இருந்தாலும், நான் எழுதிய எல்லா லெட்டருக்கும் நீ சலிக்காமல் பதில் போட்டாயே! அதைப்பற்றி நான் மிக்க சந்தோஷமடைகிறேன். வாழ்க, நம் நட்பு! வாழ்க, உன் முட்டாள்தனம்!!

இப்படிக்கு
உன் ஆருயிர்ப் பேனா நண்பன்
கேசவன்.''

கடிதத்தின் கடைசி வரியைப் படித்ததும் அருகிலிருந்த ஈஸிசேரில் 'தொப்'பென விழுந்து சாய்ந்தான் சேது.




## 'ப்ளூ'

சிங்கப்பூருக் கப்பலிலே சிங்காரமாய் வந்தது;
சென்னைநகர் வந்திறங்கி வீடுவீடாய்ச் சென்றது;
அங்கமெல்லாம் நோவெடுத்து அவதியுற வைத்ததே;
ஒரு டம்பை அரையுடம்பாய் உருகுலைத்து விட்டதே!

பட்டிதொட்டி எங்கிலுமே பறந்துபறந்து சென்றது;
பள்ளிக்கூடம் மூடிவிட்டுப் படுத்திருக்கச் செய்தது;
புட்டிபுட்டி யாய்மருந்து பருகிடவே வைத்தது;
போக்குவரத்தும் நின்றதனால் பெரியதொல்லை ஆனது

இமயமுதல் குமரிவரை கும்மாளந்தான் கொட்டுது;
உலகையெல்லாம் சுற்றிவரத் திட்டமுந்தான் போடுது;
கமழுகிற சாம்பிராணிப் புகையைநிதம் போடுவோம்;
கப்பலிலே வந்தசீக்கை நொடிப்பொழுதில் ஓட்டுவோம்!

—குகன் குருசாமி

# நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

எம். இனியாஸ் பீவி, சிலாபம்

கே: என் தங்கை என் சொல்படி கேட்பதில்லை. அதற்கு வழி?

ப: அவள் சொல்கிறபடியெல்லாம் நீ முதலில் செய்து காட்டுவதுதான். அப்புறம் நீ சொல்வதையெல்லாம் அவளும் கேட்பாள்.

செ. நாகராஜன், ஸ்ரீபெரும்புதூர்.

கே: வால் நட்சத்திரம் தோன்றுவதால் நாட்டுக்குத் தீமை என்பது உண்மையா?

ப: வான சாஸ்திரம் அப்படித்தான் கூறுகிறது. இயற்கையின் சில புதிர்களை இன்னும் யாரும் ஏற்றபடி விடுவிக்கவில்லை.

என். வேதகிருஷ்ணன், மாயவரம்

கே: நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன். என் உடலை எப்படித் தேற்றுவது?

ப: என்னப்பா நீ, டாக்டர் பார்த்து, ஆராய்ந்து கூற வேண்டியதையெல்லாம் முக்காலணா கார்டில் தெரிந்துகொண்டு விட எண்ணுகிறாயே. இது தவறு, உடனே டாக்டரிடம் செல். உடல் நிலையைப் பரிசோதித்து யோசனை கூற வேண்டியவர் அவர்தான்: பத்திரிகை ஆசிரியர் என்றால் சர்வமும் அறிந்து கொண்டவர் என்று எண்ணாதே. அவருக்கே உடலில் கோளாறு ஏற்பட்டால் டாக்டரிடம்தான் ஓடவேண்டியிருக்கிறது.

விஜயமோகன். சென்னை – 2

கே: எந்த நாட்டில் எண்ணெய்க் கிணறுகள் அதிகம்?

ப: ஈரான் நாட்டில்:

வி. கே. பிரசாத், சென்னை 1.

கே: சென்னை ராஜ்யத்தில் எவ்வளவு மின்சாரத் திட்டங்கள் உள்ளன?

ப: மேட்டூர், பைக்காரா, பாபநாசம், மோயார் ஆகிய நாலு மின்சாரத் திட்டங்கள் இருக்கின்றன. பெரியாறு, குந்தாத் திட்டங்கள் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேறும் தறுவாயில் இருக்கின்றன. மொத்தம் ஆறு திட்டங்களிலும் 2,85,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாகும்.

கே: புதிய சென்னை ராஜ்யத்தின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும் எவ்வளவு?

ப: கன்னியாகுமரி ஜில்லாவையும் சேர்த்து, புதிய ராஜ்யத்தின் நிலப்பரப்பு 50,100 சதுர மைல் ஆகும். ஜனத்தொகை சற்று முன்பின்னாக மூன்று கோடி.

வி. கல்பகம், பங்களூர்-3,

கே: உலகில் நாம் முக்கியமாகக் கற்க வேண்டியது..?

ப: வாழத் தெரிந்துகொள்வது ஆகும். அதற்கு, கல்வி, கேள்வி, பழக்கம், பண்பாடு, ஒழுக்கம், குணம் இவற்றில் சிறந்த ஒரு பெரியாரை நாடி அவரோடு பழகி, அவரைப் பின்பற்றி நடப்பது பெருந்துணை புரியும். அதனால்தான், "அரியவற்றுள்ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராகக் கொளல்" என்கிறார் வள்ளுவ முனிவர்.

தி. ப. சுந்தரம், திருச்சிராப்பள்ளி-2

கே: பன்மொழி பயில்வது அவசியமா? எதற்காக?

ப: அவசியம்தான்! மிக மிக அவசியம். பன்மொழி பயில்வது பிற மொழிகளில் ஒன்றுமில்லை எனத் தூற்றிக் குறைகூற அல்ல. தன் மொழியிலேயே அனைத்தும் இருக்கின்றன என்று கருதவும் அல்ல. தாய் மொழி இலக்கியங்களைப்போலவே பிற மொழிகளிலும் இலக்கியச் செல்வங்கள் பலபல இருக்கின்றன. அவற்றைக் கற்பதால் நல்லறிவும் நற்பண்புகளும் விரிந்து பெருகுகின்றன. பிற மொழி அழகுகள் தாய் மொழிக்கு வளத்தையும் நலனையுமே உண்டாக்குகின்றன.

குமார், வேலூர் (வ. ஆ.)

கே: மிருகக் காட்சிச் சாலையில் உள்ள மிருகங்கள் திருப்தியோடு இருக்கின்றனவா? அல்லது சிறைப்பட்டுக் கிடப்பதை எண்ணி ஏங்குகின்றனவா?

ப: சமீபத்தில் நான் படித்தும், பார்த்தும் தெரிந்துகொண்டதிலிருந்து மிருகக் காட்சிச்சாலையிலுள்ள மிருகங்கள் ஏங்குகின்றனவாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, புதிய நிலைக்கு ஏற்ப அவை வாழப் பழகிக்கொண்டு விடுகின்றன. காட்டிலுள்ள மிருகங்களை விட அவை இன்னும் திடமாகவும் ஆரோக்கியமாகவும்கூட வாழ்கின்றன.

கே. புட்டுசாமி, பங்களூர்–3.

கே: உலகில் பெரிய மலை எது?

ப: இமயமலைதான். அதன் எவரெஸ்ட் சிகரம் 29,002 அடி உயரம். ஆனால் உண்மையில் கடலில் உள்ள மலை ஒன்று அதை விட உயரமானது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஹாவாய்த் தீவுகளிலுள்ள மௌனகி என்ற மலை கடல் மட்டத்துக்குமேல் 14,000 அடி உயரம் இருக்கிறது. கடலுக்கு அடியில் அதன் ஆழம் 16,000 அடி ஆகும். ஆகவே அதன் மொத்த உயரம் எவரஸ்ட் சிகரத்தைவிடச் சற்று அதிகமானது.

நாகப்பன், பட்டுக்கோட்டை.

கே: பெண்கள் பள்ளியில் ஆண் பிள்ளைகள் யாரும் சேர்ந்து படிக்க முடியவில்லை. ஆனால் ஆண் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் மட்டும் பெண்கள் படிக்க வருகிறார்களே!

ப: வேறு வழியில்லாததால் அப்படிப் படிக்கிறார்கள். பெண்களுக்கு என்று தனிப் பள்ளிக்கூடம் இல்லாதபோதுதான் அப்படிப் படிக்க வருகிறார்கள். ஆண்பிள்ளைகளுக்குத்தான் எங்கும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவே. அவர்கள் பெண்கள் பள்ளியில் போய்ச் சேர வேண்டிய அவசியமே இல்லையே.

கே. ஏ. கணேஷ், நாகபுரி:

கே: நேருவின் புகழ் பெரிதா, மேருவின் புகழ் பெரிதா?

ப: நேருவையும் மேருவையும் இப்படியா வேறுபடுத்திப் பார்ப்பது? மேருவின் புகழ்போல் நேருவின் புகழ் ஓங்கி வருவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியுறுவோம்.

கி. சிவஞானம், மதுரை.

கே: மாணவர்களிடம் உள்ள முக்கியமான குறை எது?

ப: பயம். அது நீங்கிவிட்டால் அவர்கள் எல்லாத்துறைகளிலும் பிரகாசமாக விளங்குவார்கள். அறிவு வளர்ச்சியைத் தடுப்பது பய உணர்ச்சிதான். சிறுமை உணர்ச்சி கூட பயத்தின் பிரதிபிம்பம்தான்.

து. உப்பிலி, ஐயம்பேட்டை.

கே: சோம்பலுக்கு மருந்து என்ன?

ப: பசி; பட்டினி போட்டால் சோம்பல் ஒழிந்துவிடும். அதுதான் அதற்கு ஏற்ற மருந்து.

டி எஸ். ராஜாராமன், தஞ்சாவூர்.

கே: பதினாலு வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்குமே இலவசக் கல்வி வழங்கப் போகிறார்களா?

ப: ஆம்; இனி பிறக்கப் போகிறவர்களுக்குத்தான் அந்தச் சலுகை கிடைக்கும் என்று தோன்றுகிறது.

ஸி. கே. சீதாராமன், சிதம்பரம்.

கே: ஒருவன் பயந்தாங்கொள்ளி என்று எதிலிருந்து கண்டு பிடிக்கலாம்?

ப: அவன் சும்மாவே இருக்க மாட்டான். வாய் கிழிய எதையாவது அளந்துகொண்டிருப்பான். அல்லது எடுத்ததற்கெல்லாம் கை தட்டிக்கொண்டிருப்பான்.

கே: மரணத்தைக் கண்டு நீங்கள் பயப்படுவீர்களா?

ப: ஆம்; அது அநியாயக்காரர்களை விட்டு விட்டு, நல்லவர்களையே அடிக்கடி அபகரித்துச் சென்று விடுகிறது. அதனால்தான் அதனிடம் எனக்குப் பயம்.

ஆர். சதாசிவம், ஈரோடு.

கே: நீங்கள் ஒரு மாணவனாக இருந்தால்..?

ப: மாணவனாக இருந்தால் என்று ஏன் இழுக்கிறாய்? நான் இன்னமும் ஒரு மாணவனேதான். என் பள்ளியின் பெயர் வாழ்க்கை என்பது. அந்த வாழ்க்கையில் நிகழ்கிற பல பரீட்சைகளில் பல சமயங்களில் தோல்வி யடைந்திருக்கிறேன். சில சமயங்களில் வெற்றியும் கண்டிருக்கிறேன். நம்பிக்கை என்பது ஒன்றுதான் என் துணை நூல். அந்தப் புத்தகத்தின் துணை இல்லாமல் நான் இருப்பதே இல்லை. தோல்வியையும் கடந்து வெற்றியின் ஆசார வாசலுக்கு அதுதான் என்னை அழைத்துச் செல்கிறது. வாழ்க்கை முழுவதுமே மனிதன் இயற்கையின் மாணவனாகத்தான் விளங்குகிறான்.

எம். எஸ். சுப்பிரமணியன், ஆரணி (வ. ஆ.)

கே: என் நண்பன் நேரு ஒரு சர்வாதிகாரி என்று சொல்கிறான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: அந்தக் கருத்துச் சரியல்ல என்றுதான்.

ஆதிகேசவன், அமைந்தகரை.

கே: சோஷலிஸப் பாணி என்றால் என்ன? சுருக்கமாக விளக்கம் தேவை?

ப: சமூகத்தில் அதிக ஏற்றத் தாழ்வு இல்லாமல் அமைப்பதைத் தான் அவ்வாறு கூறுகிறோம். சமூக பொருளாதார, அரசியல் நிலைகளில் எல்லாருக்கும் சம சந்தர்ப்பமும் சம நீதியும் சம பொறுப்பும் கிடைக்கும்படிச் செய்வதுதான் சம தர்மம். அதை நம் நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அமைப்பதையே சோஷலிஸப் பாணி எனக் கூறுகிறார்கள். ஆவடியில் நடந்த 60-ஆவது இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபையில்தான் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வி. முனுசாமி, திண்டிவனம்.

கே: சென்னையில் டிராம் ஓடுவது எப்போது, ஏன் நின்றது?

ப: 1953-ஆம் ஆண்டு டிராம் ஓடுவது நிறுத்தப்பட்டது. மாதம் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் நஷ்டம் வந்ததால் நிறுத்தப்பட்டது என்று கூறப்படுகிறது.

என். தர்மலிங்கம், சோலையார் பேட்டை.

கே: மூட்டைப் பூச்சிக் கடியால் வியாதி பரவுகிறதா?

ப: பரவுவதில்லை என்று டாக்டர்கள் கருதுகிறார்கள். தூக்கம் கெட்டுப் போவதைத் தவிர வேறு தீங்கு நேருவதாகத் தெரியவில்லை. தூக்கம் கெடுவதால் ஒரு கால் ஏதாவது ஜீரண உறுப்புக் கோளாறு நேரலாம். மூட்டைப் பூச்சிக் கடியை லட்சியம் செய்யாமல் தூங்க எத்தனையோ பேர் பழகிப் போயிருக்கிறார்கள்.

க. சீதாராமன், தலைமை ஆசிரியர், ஓசூர்.

கே: பின்கண்ட ஆசிரியர்களின் சிறந்த நூல்களைக் குறிப்பிட வேண்டுகிறேன். (1) வி. ஸ. காண்டேகர். (2) மு. வரதராசனார். (3) பங்கிம் சந்திரர். (4) சரத் சந்திர சாட்டர்ஜி (5) ராஜாஜி (5) எரிக் மரியா ரிமார்க் (7) மாக்ஸிம் கார்க்கி (8) குஸ்தாவ் பிளாபர்ட் (9) லியோ டாஸ்டாய் (10) டாஸ்டாவ்ஸ்கி.

ப: அதே வரிசையில் பின்கண்ட நூல்களைக் கூறியுள்ளேன். (1) இரு துருவங்கள். (2) ஒவச் செய்தி. (3) விஷ விருக்ஷம் (4) அசலா (கிருகதாகம்) (5) வியாஸர் விருந்து (6) துன்பக் கேணி. (7) அன்னை (8) மாடம் பவாரி (9) அன்னா கரினினா (10) அசடு.

எம். ஆர். வேங்கடராமன், அமைந்தகரை.

கே: கடவுளை நேரிற் கண்டவர்கள் யாராவது இருக்கிறார்களா?

ப: எனக்கு அது தெரியாது; கண்டவர்கள் விண்டதில்லை. ஆனால் உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

## கலைமகள்

# பொருள் விளக்கப் படங்கள்

மண் எண்ணெயின் கதை, ஆற்றின் கதை, தீப் பெட்டியின் கதை, கடிதத்தின் கதை, பட்டின் கதை, பென்ஸிலின் கதை முதலிய விஷயங்களைப் படங்கள் மூலம் விளக்கும் சுவர்ப் படங்கள். 20"×30" பரப்புள்ள தாளில் கொட்டை எழுத்துக்களில் கண்ணைக் கவரும் இரு வர்ணங்களில் தயாரிக்கப்பட்டவை. நீண்டகாலம் இருக்கவேண்டுமெனும் நோக்குடன் சிறந்த காகிதத்தில் 'போட்டோ லித்தோ' முறையில் தயாரிக்கப் பெற்றவை.

சிறந்த பொது அறிவைப் போதிக்கும் இந்தப் படங்கள் ஆரம்பப் பள்ளி, ஆரம்ப உயர்தரப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, போதனுமுறைப் பள்ளி முதலியவைகளுக்கு மிகவும் உபயோகமானவை. வீட்டிலேயே குழந்தைகளுக்குப் போதிக்கவும், முதியோர் கல்விக்கும் அவசியமானவை.

ஆறு படங்கள் அடங்கிய செட் ரூ. 4/-
(போதனுமுறை விளக்கம் இலவசம்.)
தபால் செலவு தனி.

# பாடப் படங்கள்

கண்ணைக் கவரும் 45 வர்ணப் படங்கள் மூலம் தமிழ் வார்த்தைகளையும் எழுத்துக்களையும் விளையாட்டாக வீட்டில் குழந்தைகள் தெரிந்துகொள்ளலாம். 45 படங்கள், வார்த்தைகள், எழுத்துக்கள், பயிற்சி முறை அடங்கியது ஒரு செட்.

புதிய பாடத் திட்டப்படி சிறந்த அறிஞர்களால் தயாரிக்கப்பெற்றது.

ஆரம்ப, போதனுமுறைப் பள்ளிகள், முதியோர் கல்விச்சாலைகள் ஆகியவைகளுக்கு மிகவும் இன்றியமையாதது.

விலை ரூ. 1/8
தபால் செலவு தனி.

---

**கலைமகள் காரியாலயம், சென்னை-4**

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542



# கண்ணன்

# சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போட்டி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

- ★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர் கள்தான் கலந்துகொள்ளலாம்.
- ★ படங்கள் அனுப்புபவர்கள் தொடர்ந்து மூன்று இதழ்களில் வெளிவரும் கண்ணன் கழகக் கூப்பன் களில் மூன்றைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- ★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட் டிருக்கவேண்டும்.
- ★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத் தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.
- ★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைதான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.
- ★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.
- ★ ஜூலை மாதம் 31-ஆம் தேதிக்குள் படங்களை எங்க ளுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் - கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள். இந்தப் போட்டி சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்குப் பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதலிய வற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாத படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வைத் திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பிர சுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஆகஸ்டு மாத இதழில் வெளியாகும்.